
www.padippakam.com

1 - 15 ஏப்ரல் 98 □ ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்

பார்ப்பன தினமலரின்
வெடிகுண்டு அரசிய



www.padippakam.com

# "டான்செம்" ஆலையைத் தனியாருக்குத் தாரை வார்க்க சதி!

கரூர் நகருக்கு அருகேயுள்ள மாயனூரில் இயங்கிவரும் "டான்செம்" ஆலை தமிழக அரசுக்குச் சொந்தமானது. "ஆஸ்பெஸ்டாஸ்" (சிமெண்ட்) குழாய்களைத் தயாரித்து வரும் இவ்வாலை, ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய்க்கும் மேல் இலாபம் ஈட்டி வருகிறது. ஜெயா ஆட்சியின் பொழுது, நல்ல இலாபத்தோடு இயங்கி வரும் இவ்வாலையை, "கூட்டுத் துறை" என்ற பெயரில் தனியாருக்குத் தாரை வார்த்திட முயன்றார். அப்பொழுது எதிர்க் கட்சியாக இருந்த தி.மு.க.வும், அதன் தொழிற்சங்கமும் புறக்கடை வழியாக "டான்செம்" தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுத்தன. ஆனால், ஆட்சியைப் பிடித்தவுடன் மக்களின் - தொழிலாளர்களின் முதுகில் குத்தி, ஜெயாவின் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டனர்.

இதனின் முதல் கட்டமாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் நாரியம் "டான்செம்"மிடம் இருந்துதான் குடிநீர்க் குழாய்களை வாங்க வேண்டும் என்று இருந்த அரசாணையை ரத்து செய்து விட்டது, தி.மு.க. அரசு. இதன் மூலம் டான்செம்மிற்கு நட்டமேற்படுத்தி, பின்பு நட்டத்தில் இயங்குகிறது எனச் சாக்குச் சொல்லி தனியாருக்குத் தாரை வார்த்திட முயலலாம். இதோடு, டான்செம் ஆஸ்பெஸ்டாஸ் குழாய் தயாரிக்கப்படும் வளாகத்தினுள்ளேயே 22 கோடி ரூபாய் மூலதனத்தில் தகடு தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவி, இயக்க தனியார் முதலாளிகளுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையை நிர்மாணிக்கும் திறனும், மூலதனமும் டான்செம்மிடம் இருந்தும், "கூட்டுத்துறை" என்ற பெயரில் தனியார் முதலாளிகள் டான்செம்மில் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். தி.மு.க. அரசின் இவ்விரண்டு தொழிலாளி வர்க்க விரோதத் திட்டங்களை எதிர்த்து, தி.மு.க. தொழிற்சங்கம் தவிர்த்து, டான்செம்மில் இயங்கி வரும் பிற அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து 24.03.98 அன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தின.

ஓட்டுக் கட்சிகளும் அவற்றின் தொழிற்சங்கங்களும் தனியார்மயம் - தாராளமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதில் இரட்டை வேடம் போட்டு வருகின்றன. ஆட்சியில் இருந்தால் ஆதரிப்பதும், இல்லையென்றால் பெயரளவில் எதிர்ப்பதும் அவற்றின் அணுகுமுறை. எனவே தொழிலாளர்கள் ஓட்டுக் கட்சிகளின் இப்பச்சோந்தித்தனத்திற்கு எதிராக விழிப்போடு இருக்கும் அதே சமயம், அரசு தொழிலாளி வர்க்கத்தின் மீது தொடுத்துவரும் தாக்குதல்களை முறியடிக்க, புரட்சிகர தொழிற்சங்கத்தைக் கட்டியமைக்கும் கடமையினையும் மேற்கொள்ள வேண்டும்.

தகவல்:
பு.மா.இ.மு., கரூர்.

# குடியிருப்புப் பகுதியா? குப்பை மேடா? - அடிப்படை வசதி கோரிப் போராட்டம்

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சங்கம் திரையரங்கம் எதிரில் அமைந்துள்ள சாஸ்திரி நகரில் 7,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். கடந்த பத்தாண்டுகளாகவே இப்பகுதி மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதியினையும் முறையாகச் செய்து தராமல் புறக்கணித்து வருகிறது அதிகார வர்க்கம். இப்பகுதியில் 10 குடிநீர்க் குழாய்கள் இருந்தும், அனைத்திலும் தண்ணீர் வருவது கிடையாது; இரண்டில் தண்ணீர் வரும்; மீதி எட்டில் காற்று தான் வரும். செலவைக் காரணம் காட்டியே, எந்தவொரு வீட்டிற்கும் கழிவறை இணைப்பு ஏற்படுத்தித் தர மறுத்து வருகிறது சென்னை மாநகராட்சி. மூன்று பொதுக் கழிப்பிடங்களில் ஒன்று, "சுலாப் இண்டர் நேஷனல்" என்ற தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டது. மீதி இரண்டும் ஏனோதானோவென்று சுத்தம் செய்யப்படுவதால், தொற்று நோய்க் கிருமிகள் உற்பத்தியாகும் இடமாக மாறிவிட்டன. இச்சுகாதார கேட்டால் பாதிக்கப்பட்டு சில குழந்தைகள் இறந்து போன பின்னும் கூட, அதிகார வர்க்கம் அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில், சமீபத்தில் இப்பகுதியில் செயல்படத் துவங்கியுள்ள மக்கள் கலை இலக்கியக் கழகம் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மக்களைத் திரட்ட முயன்றது. இதன் முதல் கட்டமாக தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் 10.03.98 அன்று மாலை இப்பகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சாஸ்திரி நகர் பகுதி ம.க.இ.க. தோழர் ரஞ்சன் தலைமை தாங்கினார்; ம.க.இ.க. சென்னை மாவட்டச் செயலர் புவன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தின் முடிவில் சென்னை கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடந்தது.

இதனையடுத்து, பகுதி மக்களைத் திரட்டி, அதிகாரிகளையும் சந்தித்து மனு தரப்பட்டது. ம.க.இ.க.வின் சமரசமற்ற, போர்க் குணமிக்க அணுகுமுறையால், அதிகாரிகள் சாக்கு போக்கு சொல்லாமல், மின் விளக்கு, கழிப்பிடம், குப்பை வாறுதல் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளனர்.

தகவல்:
ம.க.இ.க., சென்னை.

# தி.மு.க. அரசின் இராஜீவ் விசுவாசம்

இராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட அரசு பயங்கரவாதத் தீர்ப்பைக் கண்டித்து, நெய்வேலியில் தொழிலாளர் பிரச்சாரக் குழுவினர் சுவரொட்டி இயக்கம் எடுத்தனர். இத்தீர்ப்புக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதைப் பார்த்தவுடனேயே, நான்கு தொ.பி.கு. தோழர்கள் மீது பொய் வழக்கு போட்டு உள்ளே தள்ளி விட்டது, தமிழகப் போலீசு.

வேதாரண்யம் பகுதியிலும் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக இராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பைக் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. வேதாரண்யம் போலீசு மிகுந்த விசுவாசத்தோடு, இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்த இடங்களை எல்லாம் தேடி சுரண்டிக் கிழித்துப் போட்டது. இதனைச் செய்தியாக வெளியிட்ட "தினபூமி" என்ற நாளேடு, விவசாயிகள் விடுதலை முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற ஊகச் செய்தினை வெளியிட்டு, தனது பார்ப்பன அடிவருடித்தனத்தைக் காட்டிக் கொண்டது.

தகவல்:
தொ.பி.கு., நெய்வேலி
மற்றும் வி.வி.மு., வேதாரண்யம்

# சிவப்பஞ்சலி

மக்கள் கலை இலக்கியக் கழகம் மதுரை கிளையின் ஆதரவாளராக இயங்கி வந்த தோழர் லெட்சுமி, 10.03.98 அன்று பிரசவ சமயத்தில் திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவின் காரணமாக மரணமடைந்தார். ம.க.இ.க.வின் முதல் பொதுச் செயலாளர் தோழர் கதிரவனின் வளர்ப்பு மகளான தோழர் லெட்சுமி, சிறு வயது முதற்கொண்டே புரட்சிகர அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்; ம.க.இ.க. நடத்திய பல்வேறு மைய - பகுதிப் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டதோடு, புரட்சிகர அரசியல் பிரச்சார வேலைகள், சுவரொட்டி தயாரித்தல் - ஒட்டுதல் போன்ற அமைப்பின் அனைத்து வேலைகளிலும் ஊக்கத்துடன் கலந்து கொண்டு பணியாற்றி வந்தார். பு.மா.இ.மு. - மதுரை கிளையைச் சேர்ந்த தோழர் கலைவாணனைக் காதலித்துப் புரட்சிகர மணம் புரிந்து கொண்டார் தோழர் லெட்சுமி. பல நேரங்களில் தோழர்களுக்காக தனது உணவையும் இன்முகத்தோடு எடுத்து வைத்த தோழர் லெட்சுமி, தனது சொந்த வாழ்வில் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு நெறி முறைகளைப் பிறழ்வின்றிக் கடைப்பிடித்தார். அவர் கனவு கண்ட சுரண்டலற்ற சமூகத்தை அமைத்திட, நக்சல்பாரி பாதையில் உறுதியோடு நின்று போராடுவோம் எனச் சபதமேற்று, தோழர் லெட்சுமிக்கு எமது சிவப்பஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்!

— ம.க.இ.க., மதுரை.


படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி:13

இதழ்: 10

1 ஏப். '98 - 15 ஏப். '98

உள்நாடு:
தனி இதழ்: ரூ.4.00
ஆண்டு சந்தா: ரூ.96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015.
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# இந்துவெறி பாசிஸ்டுகளிடம் கருணாநிதியின் சரணாகதி

கோவை தொடர் குண்டு வெடிப்புகளை அடுத்து, கருணாநிதி அரசின் போலீசு நடத்தும் தேடுதல் வேட்டை - திடீர் சோதனைகளால் ஒட்டுமொத்த இசுலாமிய சமூகத்தினர் அச்சுறுத்தலுக்கும் அவமானத்திற்கும் ஆளாகி நிற்கிறார்கள். இசுலாமியர் குடியிருப்புகள் நள்ளிரவில் போலீசாரால் முற்றுகையிடப்பட்டு வீடு வீடாகச் சோதனையும், பேருந்து - ரயில்களில் திடீர் சோதனையிட்டு சந்தேகப்படும் அப்பாவி இசுலாமியர்களை விசாரணைக்கு இழுத்துச் செல்வதும், இசுலாமிய வியாபாரிகளுக்கு லாரிகளில் வரும் சரக்குகளைச் சோதனையிட்டுப் பீதியூட்டுவதுமாக இந்த வேட்டை தீவிரமாகியுள்ளது. போலீசார் அடுத்தடுத்து கைப்பற்றிய வெடிகுண்டுகளையும், பிடிபட்ட தீவிரவாத இயக்கத்தினரையும் தொலைக் காட்சிகளும், பரபரப்பு பத்திரிகைகளும் சினிமா படம் போல வெளியிட்டுத் திகிலூட்டுகின்றன.

இவற்றால், இசுலாமியர்கள் என்றாலே தீவிரவாதிகள், சதிகாரர்கள், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்ற சந்தேகத்தோடு பார்ப்பதும், அவர்கள் குடியிருக்க வீடு கொடுக்க மறுப்பதும், அவர்கள் தமது உடமைகளை விற்கவோ, அடமானம் வைத்துக் கடன் பெறவோ கூட முடியாமல் தத்தளிப்பதுமான நிலைமை உருவாகி வருகிறது. இந்து வெறியர்கள் எதைச் சாதிக்கத் துடித்தார்களோ, அது அரங்கேறத் தொடங்கிவிட்டது.

தொடர் குண்டு வெடிப்புகளை அடுத்து, தி.மு.க அரசைக் கலைக்கக் கோரி ஜெயா கும்பல் அச்சுறுத்துவது, அதன் கூட்டணியான இந்துவெறி பாசிச சக்திகள் மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது, நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. பலத்த அடிவாங்கியிருப்பது ஆகியவற்றால் பீதியடைந்துள்ள கருணாநிதி, தனது ஆட்சி கவிழ்க்கப்பட்டு விடாமல் காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கிறார். தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டு, இசுலாமிய மதவெறி தீவிரவாதத்தை முறியடிக்க, தான் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பட்டியல் போடுகிறார்.

இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து மதவெறி அமைப்புகளை சுதந்திரமாக உலாவ விட்டுள்ள கருணாநிதி, கோவை குண்டு வெடிப்புகளைக் காரணம் காட்டி இசுலாமிய தீவிரவாத அமைப்புகளை மட்டுமே தடை செய்தார். இத்துணைக்கும் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் எதிர்விளைவுதான் கோவை குண்டு வெடிப்புகள் என வசனம் பேசியவர் கருணாநிதி. இந்து - இசுலாம், இவ்விரண்டு மதத் தீவிரவாதத்தால், இரண்டு மதங்களையும் சேர்ந்த அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்ட போதும், அதற்கு இழப்பீடு வழங்குவது, நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறுவது போன்ற விசயங்களில்கூட கருணாநிதி ஒருதலைப்பட்சமாகவே, இந்து மதத் தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்தும் முகமாகவே நடந்து வருகிறார். வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்ற நாளன்று தமிழகத்தில் குண்டுவெடிப்பு எதுவும் நிகழாமல் பார்த்துக் கொண்டதற்காக, வக்கிரமாக ஒவ்வொரு போலீசாருக்கும் 1000 ரூபாய் பரிசளிக்கிறார்.

தனது ஆட்சிக்கு நெருக்கடி வரும்போதெல்லாம் கருணாநிதி இப்படி சரணாகதி அடைவது ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே அவர் முதல்வராக இருந்தபோது, பயங்கரவாத - பிரிவினைவாதப் பீதியூட்டி பாசிச ராஜீவ் - ஜெயா கும்பல் அச்சுறுத்திய போது, ஈழப் போராளிகளையும், அகதிகளையும் பிடித்துச் சிறையிலடைத்து, பயங்கரவாத சக்திகளை ஒடுக்கிவிட்டதாகப் பட்டியல் போட்டுக் காட்டினார். அண்மையில், தென் மாவட்டங்களில் சாதிய ஆதிக்கத்துக்கு எதிராகத் தாழ்த்தப்பட்டோர் கிளர்ந்தெழுந்தபோது, அவர்களைக் கடுமையாக ஒடுக்கி, ஆதிக்க சாதிகளின் நிர்பந்தங்களுக்குப் பணிந்து, அரசுப் பேருந்துகளுக்கும், சில மாவட்டங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த அரசியல் - சமுதாயத் தலைவர்களின் பெயர்களையும் சேர்த்து நீக்கினார். பாசிச ஜெயாவையும் விஞ்சும் வகையில், தஞ்சமடைந்த ஈழ அகதிகளைக் கூட ஒளிப்பேழையில் படம் பிடித்து, போலீசு நிலையங்களில் பதிவு செய்ய வைத்து, தனது ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு முறையாகப் பாதுகாக்கப்படுவதாகக் கணக்கு காட்டுகிறார்.

ஜனநாயக சிந்தனை கொண்ட 'குடியரசு'த் தலைவர் கே.ஆர்.நாராயணன், தனது ஆட்சியைக் கலைக்க முற்பட மாட்டார் என்று ஒருபுறம் இறைஞ்சுகிறார். மறுபுறம் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவிடம் தனது ஆட்சியைக் கவிழ்த்து விடாதிருக்க உதவுமாறு இரகசிய பேரம் நடத்துகிறார். பார்ப்பன - பனியா இந்து மதவெறிக்கும்பலிடம் சரணடைந்து, ஒத்திசைவாக நடந்து கொள்வதன் மூலமோ, இசுலாமியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளால் அக்கும்பலைத் திருப்திபடுத்தி நற்சான்றிதழ் பெறுவதன் மூலமோ தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் எனும் மு.க.வின் உத்தி ஒருக்காலும் வெற்றிபெறாது. மாறாக, இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு இந்துவெறி பாசிச கும்பல் மேலும் வலுப்பெற்று, தி.மு.க. ஆட்சியைக் காவு கொள்ளவே முயற்சிக்கும்.

இசுலாமிய தீவிரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பது சரியானதுதான். ஆனால் இந்து மதவெறி பயங்கரவாதத்தை முறியடிக்காமல் இது ஒருபோதும் சாத்தியமில்லை. இந்து மதவெறியை எதிர்த்துப் போராடாமல், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சிகளும் மத நல்லிணக்கம் பேசித் திரிகின்றன. இசுலாமிய தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் அப்பாவி மக்களை வதைப்பதற்குத் துணைபோகின்றன. இத்தகைய சமரச - சரணாகதிகளுக்கு இடம் தராது, இசுலாமிய தீவிரவாத அமைப்புகளோடு, ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி உள்ளிட்ட அனைத்து இந்து மதவெறி அமைப்புகளைத் தடைசெய்வதும், மதத்தின் பெயரால் அரசியல் செய்வதைத் தடை செய்வதும் மட்டுமே, அனைத்து மதவெறி தீவிரவாதத்துக்கும் முடிவு கட்டும்.

www.padippakam.com

## ஆட்சியதிகாரத்தில் பா.ஜ.க.:

# பங்காளி சுமையும் பாசிச இலட்சியமும்

பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சிக்கு வந்ததன் மூலம் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது என்று அகமகிழ்ந்து போகிறார், புதிய பிரதமர் வாஜ்பாய். உண்மைதான்! பாரதீய ஜனதா கூட்டணி அரசை ஆதரிப்போரில் ஒரு உறுப்பினர் நினைத்தால் கூட இந்த அரசைக் கவிழ்த்து விட முடியும் என்கிற ''நித்திய கண்டம்; பூரண ஆயுசு'' நிலையில் இந்த அரசு பதவியேற்று ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்துள்ளது.

இதற்கு முந்தைய ஐக்கிய முன்னணி அரசு கூட காங்கிரசின் ஆதரவை நம்பி நித்திய கண்டத்துடன் ஆட்சி நடத்திய கூட்டணி அரசுதான். காங்கிரசு ஆதரவை விலக்கிக் கொண்டால் எந்த நேரமும் ஆட்சி கவிழலாம் என்ற நிலையில் இருந்ததுதான். இருப்பினும் எந்தவொரு தனிப்பட்ட உறுப்பினரும் ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியும் என்ற நிலை இருக்கவில்லை.

ஆனால் இப்போது நிலைமை வேறு; ஒரு கட்சி அல்ல; ஒரு உறுப்பினர் நினைத்தால் கூட பாரதீய ஜனதா கூட்டணி அரசைக் கவிழ்த்துவிட முடியும் என்ற திரிசங்கு நிலையில் இந்த அரசு பதவியேற்றுள்ளது. சில சுயேட்சை உறுப்பினர்கள், ஒரு உறுப்பினர் கட்சிகள், அமைச்சரவைக்கு வெளியிலிருந்து ஆதரிக்கும் கட்சிகள், நடுநிலை வகிக்கும் கட்சிகள் ஆகியவற்றை நம்பியே இந்த அரசு பதவியேற்றுள்ளது. இதுவரை பதவியேற்ற எந்தவொரு அரசுக்கும் இத்தகைய அவமானகரமான நிலைமை ஏற்பட்டதில்லை.

நான்கு தொகுதிகளில் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 539-ஆக உள்ளது. சபாநாயகர் நீங்கலாக இவர்களில் 270 பேரின் ஆதரவு இருந்தால்தான் பாரதீய ஜனதா தனது பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியைத் தொடர முடியும். ஆனால் தேர்தலுக்கு முந்தையை கூட்டணியின்படி பாரதீய ஜனதாவுக்கு 252 பேரின் ஆதரவுதான் இருந்தது. தேர்தலுக்குப் பிறகு அரியானா லோக்தளம், அருணாச்சல காங்கிரசு, ஒரு உறுப்பினர் கட்சிகள் மற்றும் சுயேட்சைகளின் ஆதரவைப் பெற்று 263 பேரின் ஆதரவு உள்ளதாக கணக்குக் காட்டியது.

நம்பிக்கை வாக்கெடுப்பின் போது தெலுங்கு தேசக் கட்சி, காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி ஆகியன பாரதீய ஜனதா கூட்டணி அரசுக்கு ஆதரவாக சந்தர்ப்பவாத ''பல்டி'' அடித்ததால், 274 பேரின் ஆதரவு பெற்று குறுகிய பெரும்பான்மையில் இந்த அரசு தப்பிப் பிழைத்துள்ளது.

**''ஆட்சியைப் பிடிக்க காலைப்பிடி!**
**அவசியமானால் கழுத்தைப்பிடி!''**

இந்நிலையில் ஆட்சியைக் காப்பாற்றவும், எண்ணிக்கை விளையாட்டில் பெரும்பான்மையை நிரூபிக்கவும் உ.பி. முதல்வர் கல்யாண் சிங்கின் உத்தியைக் கையாண்டு தகிடுதத்தங்களைச் செய்வதைத் தவிர பாரதீய ஜனதாவுக்கு வேறுவழி ஏதும் கிடையாது. ''ஒத்துழைப்பு'', ''கருத்தொற்றுமை'', சமரசம்'', ''எதிர்க்கட்சிகளை எதிரிக் கட்சிகளாக நினைக்கவில்லை'', ''தேர்தல் களத்தை மறந்துவிட்டு எல்லோரும் இந்தியாவின் எதிர்காலத்தைக் கட்டியமைக்க முன் வர வேண்டும்'' என்று எல்லா கட்சிகளிடமும் கூழைக் கும்பிடு போட்டுக் கெஞ்சத் தொடங்கிவிட்டார் வாஜ்பாய். பாரதீய ஜனதா அரசை ஆதரிக்கும் ஒரு உறுப்பினர் கட்சிக்கும், சுயேட்சைகளுக்குக் கூட அமைச்சர் பதவி அளித்து ஆட்சியைக் காப்பாற்ற கடைக்கோடி நிலைக்கும் சென்று விட்டார்.

ஐக்கிய முன்னணியை தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட கதம்பக் கூட்டணி என்று சாடிய பாரதீய ஜனதா, அதைவிட எண்ணிக்கையில் அதிகமான கட்சிகளுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளது.

ஆட்சியைப் பிடித்துவிட்ட பூரிப்பில் இந்துவெறி பாசிஸ்டுகள்



பதவி ஆசை காட்டி தேர்தலுக்குப் பிறகு அரியானா லோக்தளத்தை தம் பக்கம் இழுத்துள்ளது. தேர்தல் சந்தையில் விலைபோகாத ஆந்திராவின் லட்சுமி பார்வதியைக் கூட்டணியிலிருந்து கழற்றி விட்டு, சந்திரபாபு நாயுடுவின் ஆதரவுக்காக நாயாய் அலைகிறது. நடுநிலை வகிக்கும் அக்கட்சி, சந்தர்ப்பம் வரும் போது எதிர்க் கட்சிகளின் பக்கம் சாய்ந்து விடாதிருக்க, சபாநாயகர் தேர்தலில் அக்கட்சியைச் சேர்ந்த பாலயோகிக்கு ஆதரவளித்து வெற்றி பெறச் செய்துள்ளது.

ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த, அசாமை ஆளும் மகந்தாவின் கணபரிஷத் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, ''தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதாகக் கூறி மாநில அரசைக் கலைக்கப் போவதாக'' பாரதீய ஜனதா திரைமறைவில் அச்சுறுத்தியது. அரண்டு போன அவர், வடகிழக்கு மாநிலங்களில் வெற்றி பெற்ற சுயேட்சைகளையும், அருணாச்சல காங்கிரசு, சிக்கிம் ஜனநாயக முன்னணி, மணிப்பூர் மாநில காங்கிரசு ஆகிய ஒரு உறுப்பினர் கட்சிகளையும் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவளிக்கச் செய்துள்ளார். மாநிலத்தில் தமது ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ள தற்போது ஐக்கிய முன்னணியிலிருந்து விலகி விட்டதாக அவர் அறிவித்துள்ளார்.

இதேபோல, நைச்சியமாகவும் மிரட்டிப் பணிய வைத்தும் காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சியை ஐக்கிய முன்னணியிலிருந்து விலகச் செய்வதில் பாரதீய ஜனதா வெற்றி பெற்றுள்ளது. இதுதவிர, பிழைப்புவாத பகுஜன் சமாஜ் கட்சித் தலைவி மாயாவதிக்கு உள்துறை இணை அமைச்சர் பதவியும் ரூ. 5 கோடியும் தருவதாகப் பேரம் நடத்தி அம்பலப்பட்டதால் அம்முயற்சியைக் கைவிட்டுள்ளது.

இத்தகைய தகிடுதத்தங்களோடு அவசியமானால் காலைப் பிடி அல்லது கழுத்தைப்பிடி என்று எத்தகைய வேடம் போட்டாவது ஆட்சியைப் பாதுகாக்க வெறியோடு அலைகிறது. ஆனாலும் கூட்டணியில் உள்ள பல்வேறு பிராந்திய, பிழைப்பு வாதக் கட்சிகளின் மிரட்டல்கள், கழுத்தறுப்புகளைச் சமாளிக்க முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது.

**கூட்டணிக் கட்சிகளின் கழுத்தறுப்புகள்**

18 இடங்களைப் பெற்ற ஜெயலலிதா, மிகப் பெரிய பாரதீய ஜனதா கட்சியின் கண்ணில் விரலைவிட்டு ஆட்ட முடியும் என்கிற அளவுக்கு கூட்டணிக் கட்சிகளின் அச்சுறுத்தல் தொடர்



படிப்பகம்

www.padippakam.com

கிறது. ''தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும்; சு. சாமிக்கு நிதியமைச்சர் பதவியும், வாழப்பாடி ராமமூர்த்திக்கு சட்ட அமைச்சர் பதவியும் தரப்பட வேண்டும். தி.மு.க. அரசு தொடுத்துள்ள ஊழல் வழக்குகளிலிருந்து தன்னையும் தனது கூட்டாளிகளையும் விடுவிக்க வேண்டும்'' என்று ஜெயா கும்பல் மிரட்டியது. இல்லையேல் ஆதரவு தரமாட்டோம் என்று பிடிவாதம் செய்து இழுத்தடித்தது.

இந்த விவகாரம் அம்பலமானதும் காவிரி நீர், பெரியாறு அணையை உயர்த்துவது, தமிழை ஆட்சி மொழியாக்குவது, 69% இட ஒதுக்கீடு முதலான தமிழக உரிமைகளுக்காகப் போராடுவதாக சவடால் அடித்தது. அவமானப்படுத்துகிறார்கள், அலட்சியப்படுத்துகிறார்கள், அசிங்கப்படுத்துகிறார்கள் என்று பகிரங்கமாக பாரதீய ஜனதாவை வசைபாடிய பிறகும், காலில் விழாத குறையாக கெஞ்சிக் கூத்தாடி ஜெயாவின் ஆதரவை கடைசியில் பாரதீய ஜனதா பெற்றுள்ளது.

எத்தகைய இழிவையும் தாங்கிக் கொண்டு பதவியில் ஒட்டிக் கொள்வதே பாரதீய ஜனதாவின் லட்சியம் என்றாகிவிட்ட பிறகு, கூட்டணிக் கட்சிகள் பாரதீய ஜனதாவை உருட்டி மிரட்டுகின்றன. பாசிச ஜெயா கும்பல் தனக்கே உரித்தான அகம்பாவத்துடன் ஆட்டுவித்தார் என்றால், மற்ற கூட்டணிக் கட்சிகள் நாகுக்கான முறையில் கழுத்தறுத்தன. இது தவிர பாரதீய ஜனதா கட்சிக்குள்ளேயே பதவி வெறி கோஷ்டிச் சண்டைகள் தீவிரமாகி விட்டன. இவற்றைச் சமாளித்து, சமரசப்படுத்தி ''தாஜா'' செய்வதே 'திறமையான' பிரதமர் வாஜ்பாயின் அன்றாடப் பணியாகிவிட்டது.




### நாற்காலிக்காக நாய்ச்சண்டை
### கூட்டணிக்குள் குத்து - வெட்டு

• மகாராஷ்டிராவின் பா.ஜ. கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராம் நாயக்கை காபினெட் அமைச்சராக்காமல் இணை அமைச்சராக்கியதற்கு அம்மாநில பா.ஜ. கட்சியினர் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். • கர்நாடக லோக் சக்தி கட்சித் தலைவரான ஹெக்டேவுக்கு முக்கிய துறையை அளிக்காமல் வர்த்தகத் துறையை ஒதுக்கியதால், அவர் அமைச்சர் பொறுப்பு ஏற்பதில் தாமதம் செய்து, சமரசத்துக்குப் பிறகு ஏற்றுள்ளார். • பிஜு ஜனதா தளத்தின் முக்கிய தலைவரான திலீப் ராய்க்கு இணை அமைச்சர் பதவி தரப்பட்டதால் அக்கட்சியினர் ஆத்திரமடைந்தனர். பின்னர் சமரசம் செய்து தனிப் பொறுப்பாக நிலக்கரி துறை அவருக்கு ஒதுக்கப்பட்டது. • பா.ஜ.க. கூட்டணியைச் சேர்ந்த அரியானா விகாஸ் கட்சிக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை. தேர்தலுக்குப் பிறகு பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள சௌதாலாவின் அரியானா லோக்தளத்தின் நிர்ப்பந்தம்தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் பா.ஜ. கட்சிக்கும் அரியானா விகாஸ் கட்சிக்குமிடையே ''லடாய்'' ஏற்பட்டுள்ளது. • அகாலிதளத்தைச் சேர்ந்த பர்னாலாவுக்கும் பஞ்சாப் முதல்வரின் மகன் என்பதற்காகவே சுக்பீர் சிங்குக்கும் அமைச்சரவையில் பதவியளிக்கப்பட்டுள்ளது. மூத்த தலைவரான ஜோராசிங்குக்கு பதவி தரப்படவில்லை என்பதால் அக்கட்சியினர் அதிருப்தியை தெரிவித்துள்ளனர். • சட்டத்துறை ஒதுக்கப்படும் என்று எதிர்பார்த்த ராம்ஜெத்மலானிக்கு நகர்ப்புற மேம்பாட்டுத் துறை ஒதுக்கப்பட்டதால் அதிருப்தியுற்ற அவர், பொறுப்பேற்பதில் தாமதம் செய்தார். • தொழில் துறை வேண்டுமென்று கேட்ட சமதா கட்சியின் தலைவரான ஜார்ஜ் பெர்னான்டஸ், அது கிடைக்காததால் அரசில் பங்கேற்கப் போவதில்லை என்று முறுக்கிக் கொண்டார். சமரசம், சரிக்கட்டல்களுக்குப் பிறகு அவர் பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ளார். • கூட்டணி கட்சிகளின் நிர்ப்பந்தங்கள் ஒரு புறமிருக்க பாரதீய ஜனதா கட்சிக்குள்ளேயே நிதியமைச்சராக யாரை நியமிப்பது என்பதில் லடாய் ஏற்பட்டது. பிரதமர் வாஜ்பாய், தனது விசுவாசியான ஜஸ்வந்த் சிங்கை நிதியமைச்சராக்க விரும்பினார். ஆனால் பாரதீய ஜனதாவின் தலைமை குருபீடமான ஆர்.எஸ்.எஸ்.-ன் கட்டளைப்படி அத்வானி, நிதியமைச்சராக யஷ்வந்த் சின்காவை முன்மொழிந்தார். கடைசியில் ஆர்.எஸ்.எஸ்.-ன் கட்டளை நிறைவேற்றப்பட்டது. வாஜ்பாயை சமரசப்படுத்த ஜஸ்வந்த் சிங், திட்டக் கமிஷனின் துணைத் தலைவராக்கப்பட்டுள்ளார்.

### தேசிய செயல்திட்டமா?
### தேசியப் பித்தலாட்டமா?

இத்தனை நெருக்கடிகள், குளறுபடிகளை மூடமறைக்க 18 கூட்டணிக் கட்சிகளின் சார்பில் தேசிய செயல்திட்டத்தை வெளியிட்டு கவர்ச்சி வெள்ளத்தில் மக்களை ஏய்க்க பாரதீய ஜனதா கிளம்பியுள்ளது.

தேசிய செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, 5-ஆம் வகுப்பு வரையிலான இலவசக் கல்விக்கும், பெண்களுக்கு கல்லூரி படிப்பு வரையிலான இலவசக் கல்விக்கும் குறைந்தபட்சம் 69,000 கோடி ரூபாய் தேவை. 1997-98-ம் ஆண்டில் பட்ஜெட்டில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதை விட 600 மடங்கு அதிகமான நிதி தேவை. அடுத்த ஐந்தாண்டுகளில் அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்போவதாக பாரதீய ஜனதா கூட்டணி அரசு கூறுகிறது. இதற்கு மட்டும் 51,000 கோடிக்கு மேல் தேவை எனத் திட்ட வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர். இவ்வளவு அதிகமான நிதியை எங்கிருந்து, எப்படி பெறப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி.

இதேபோல வேலையின்மையையும் வறுமையையும் ஒழிப்பதே எங்கள் லட்சியம் என்று தேசிய செயல் திட்டத்தில் சவடால் அடிக்கின்றனர். ''விவசாயத் துறையில் எதிர்பார்த்தபடி முதலீடுகள் அதிகரித்தால், கிராமப்புற வேலை வாய்ப்பு பெருகும்; இதனால் வாங்கும் சக்தி அதிகரித்து, நகர்ப்புற ஆலைகளில் உற்பத்தியும் வேலை வாய்ப்பும் பெருகும்; பிறகு வேலையின்மைக்கே வேலையில்லாமல் போய்விடும்'' என்று இந்துவெறி ஆட்சியாளர்கள் கதையளக்கின்றனர்.

அதுசரி! விவசாயத்தில் முதலீட்டைப் பெருக்க என்ன செய்வது? அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பாவாகி விடலாம் என்கிற கதையாக, விவசாய உற்பத்தி பெருகினால் வேலையின்மை ஒழிந்து விடும் என்று காதில் பூச்சுற்றுகின்றனர். திட்டமுதலீட்டில் 60% நிதி வேளாண்மை, பாசன வசதிக்கு ஒதுக்கப்படும் என்பது பெரிய அணைகளைக் கட்டும் நோக்கத்துடன் தான் கூறப்பட்டுள்ளதே தவிர, விவசாய மேம்பாட்டுக்காக அல்ல.

அதே போல, சுதேசி முழக்கமும் வெறும் பம்மாத்துதான்! பாரதீய ஜனதாவின் சுதேசி என்பது அந்நிய நிறுவனங்களின் சொத்துக்களை நட்டஈடின்றி பறிமுதல் செய்வதோ, கோகோ கோலா, பெப்சி குளிர்பானங்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதோ அல்ல. நுகர்பொருள் துறையில் நேரடி அந்நிய முதலீடுகளைக் குறைத்து தொழில்நுட்ப பரிமாற்றம் மட்டும் செய்து கொள்வது, என்ரான் நிறுவனம் போல மின்சாரம் மற்றும் பெருமுதலீட்டைக் கொண்ட அடிக்கட்டுமான துறைகளில் அன்னிய முதலீட்டை ஊக்குவிப்பது என்பதுதான் அதன் சுதேசிக் கொள்கை. அதனால்தான் ''பாரதீய ஜனதா அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டு பன்னாட்டு நிறுவனங்கள் அச்சமடையத் தேவையில்லை'' என்கிறார் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா. ''சுதேசியும் தாராளமயமும் இணைந்த கலப்புப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுவோம்'' என்கிறார் தொழிலமைச்சர் சிக்கந்தர் பக்த்.

நாட்டை மறுகாலனியாக்க ஏகாதிபத்திய வல்லரசுகளின் முக்கிய ஆயுதமாக உள்ள ''உலக வர்த்தக நிறுவனத்திலிருந்து (WTO) விலக மாட்டோம்; அதேசமயம் இந்தியாவின் நலவுரிமைக்காக வாதாடுவோம்'' என்கிறார் பிரதமர் வாஜ்பாய். மன்மோகன்



படிப்பகம்

www.padippakam.com

தொடங்கிவைத்த, நாட்டை மறு அடகு வைக்கும் "பொருளாதார சீர்திருத்தங்களும், தாராளமயமாக்கலும் முழுவீச்சுடன் தொடரும்" என்கின்றனர் இதர அமைச்சர்கள். ஜப்பானிய "டயோட்டா" காரில் ரத யாத்திரை நடத்திய இப்பாசிஸ்டுகள், "இந்தியாவை இந்தியர்களே கட்டியமைக்க வேண்டும்" என்று முழங்குவது நல்ல வேடிக்கை! தாங்கள் ஆளும் மாநிலங்களில் அந்நிய முதலீடுகளை வரவேற்பதில் எல்லோருக்கும் முன்னோடியாகத் திகழும் இவர்கள், 'சுதேசி' பற்றி பிதற்றுவது அதைவிடக் கோமாளிக் கூத்து!

தமது கட்சியின் வேட்பாளர்களில் பெண்களுக்கு 33% ஒதுக்கீடு செய்ய முன்வராத இவர்கள், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33% ஒதுக்கீடு செய்வதற்கான மசோதாவை நிறைவேற்றப் போவதாக் கூறுவதும், அரசுத்துறை நிறுவனங்களைத் திவாலாக்கிய காங்கிரசுக்கு நேற்றுவரை கைத்தாளம் போட்டுவிட்டு, இப்போது அரசுத்துறை நிறுவனங்களைச் சீரமைத்து புத்துயிர் ஊட்டுவோம் என்பதும் கடைந்தெடுத்த மோசடியே அன்றி வேறில்லை.

ஊழலற்ற நல்லாட்சி தரப்போவதாகக் கூறும் பாரதீய ஜனதா, வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்ந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சேடப்பட்டி முத்தையா, வீட்டுமனை ஊழலில் சிக்கி நாறிய ஹெக்டே உள்ளிட்ட ஊழல் பெருச்சாளிகளுக்கே மத்திய அமைச்சர் பதவியை அளித்துள்ளது.

தேர்தலுக்கு முன்பு வரை, ஜெயா மீதான ஊழல் புகார் வழக்குகள் தொடர்பாக பாரதீய ஜனதா தலைவர்கள் பேசும்போது, சட்டம் தனது கடமையைச் செய்யும் என்றே கூறி வந்தனர். ஆனால் இப்போது தேசிய செயல் திட்டத்தில் அதுபற்றி எதுவுமில்லை. பிரதமர் உட்பட எந்தப் பதவியில் இருந்தாலும் அவர்களுக்கு எதிரான ஊழல் புகார்கள் குறித்து விசாரிக்க, போதிய அதிகாரமுள்ள "லோக்பால்" அமைப்பு உருவாக்கப்படும் என்கிறது தேசிய செயல் திட்டம். ஆனால் தற்போது விசாரணையில் உள்ள ஊழல் வழக்குகளில் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்ற வார்த்தைகள் செயல் திட்டத்தில் இல்லை. தமிழகத்தைச் சூறையாடிய பாசிச ஜெயா கும்பலைத் திருப்திபடுத்தவே இந்த ஏற்பாடு!

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழகத்தின் உயிராதாரமான காவிரி நீர் பிரச்சினை பற்றி தேசிய செயல் திட்டத்தில் ஒரு வார்த்தை கூட இல்லை. போராடிப் பெற்ற காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை செயல்படுத்த மறுத்துவிட்டு, "மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பகிர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காண தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்படும்" என்று அப்பட்டமாக தனது துரோகத்தனத்தைக் கக்குகிறது, பாரதீய ஜனதா கூட்டணி.



'தேசிய'ப் பித்தலாட்டம்: தேசிய செயல் திட்டத்தை வெளியிடும் பாரதீய ஜனதா கூட்டணித் தலைவர்கள்

அறுதிப் பெரும்பான்மை பெற முடியாமல், கூட்டணிக் கட்சிகளின் தயவில் ஆட்சியமைந்துள்ளதால், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் 370-ஆவது அரசியல் சட்டப் பிரிவை ரத்து செய்வது; தனி - குடும்ப சட்டங்களை ஒழித்து பொது சிவில் சட்டம் கொண்டு வருவது, அயோத்தியில் ராமன் கோயில் கட்டுவது ஆகியன பற்றி தேசிய செயல் திட்டத்தில் ஏதும் குறிப்பிடாமல் பாரதீய ஜனதா அடக்கி வாசிக்கிறது.

அதே சமயம் பா.ஜ.க. துணைத் தலைவரான சுந்தர்சிங் பண்டாரி, "கட்சியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விஷயங்களை (அயோத்தி, காஷ்மீர், பொது சிவில் சட்டம், காசி - மதுராவிவகாரம் முதலியன) கட்சி உறுதியாக செயல்படுத்தும்" என்கிறார். "முஸ்லிம்களின் ஒப்புதலுடன் அயோத்தியில் ராமன் கோயில் கட்டுவோம்" என்று இந்துத்துவ பரிவாரங்கள் கூறுகின்றன. தேசிய செயல் திட்டத்தில் இவை பற்றி வாய் திறக்காமல் இருப்பது பாசிசப் பாசாங்குதான் என்பதை இது நிரூபித்துக் காட்டிவிட்டது.

### நாட்டைக் கவ்வியுள்ள பாசிசப் பேரபாயம்

இந்துவெறி பாசிச வலதுசாரி கூட்டணி ஆட்சிக்கு வந்துள்ள போதிலும், அதில் அங்கம் வகிக்கும் பிராந்தியக் கட்சிகளின் பலம் - நிர்பந்தம் காரணமாக பாரதீய ஜனதா நிலையான ஆட்சியையும் இந்துத்துவ தேசியத்தையும் சாதிக்க முடியுமா என்று சிலர் சந்தேகிக்கின்றனர். பிராந்தியக் கட்சிகளின் தாக்கம் உள்ள போதிலும், அவற்றின் கோரிக்கைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடும் வகையில் பயங்கரவாத - பிரிவினைவாதப் பீதியூட்டி, தேசிய ஒருமைப்பாடு கூச்சலிட்டு அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டும், சித்தாந்த ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் திரட்டப்பட்டுள்ள தனது குண்டர் படையைக் கொண்டும் இந்துவெறி பாசிசத்தை நிறுவ பாரதீய ஜனதா கும்பல் ஒருக்காலும் தயங்காது. இதற்காகவே பாசிச இந்து வெறியரான அத்வானி உள்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார். மேலும் என்ரான் விவகாரத்தில் அதன் 'சுதேசி' முகத்திரை கிழிந்த போதிலும், குறுகிய தேசிய வெறியூட்டும் நோக்கங்களுக்காகவே மீண்டும் சுதேசி நாடகமாடுகிறது. இந்துத்துவ அகண்ட பாரதக் கனவுடன், அவசியமானால் அணு ஆயுதம் தயாரிப்போம் என்று கொக்கரிக்கிறது.

எதிர்க்கட்சி கூட்டணியான ஐக்கிய முன்னணியில் இருந்த தெலுங்கு தேசக் கட்சியின் "பல்டி"க்குப் பிறகு, காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சியும், அசாம் கணபரிஷத் கட்சியும் ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேறி புதியதொரு முன்னணியை நிறுவியுள்ளன. காங்கிரசிலிருந்தும் ஐக்கிய முன்னணிக் கட்சிகளிலிருந்தும் மேலும் சிலரும் குழுக்களும் வெளியேறி பதவிக்காக பாரதீய ஜனதா கூட்டணியை ஆதரிக்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. போதாக்குறைக்கு காஞ்சி மட சங்கராச்சாரியும் பாரதீய ஜனதா அரசை ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறார்.

இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு நாட்டை மறு காலனியாக்கும் ஏகாதிபத்திய சேவைக்கு நிலையான ஆட்சி; பயங்கரவாத பீதியூட்டி சிறுபான்மை மத - இனத்தினரையும் புரட்சிகர ஜனநாயக சக்திகளையும் ஒடுக்க இந்துத்துவ பாசிசம் என்னும் தனது நோக்கங்களை இந்து வெறிக்கும்பல் ஈடேற்றிக் கொள்ளத் தயங்காது. ஒரு வேளை காங்கிரசு, ஐக்கிய முன்னணி, 'இடதுசாரி' முன்னணி ஆகியன கூட்டுச் சேர்ந்து மாடுபிடிக்கும் வியாபாரம் மூலம் தற்போதைய பாரதீய ஜனதா கூட்டணி அரசைக் கவிழ்த்தாலும், மீண்டும் பாசிச காங்கிரசே பதவிக்கு வரக் காத்திருக்கிறது.

இந்துமதவெறி பாசிச பேரபாயம் நாட்டைக் கவ்வியுள்ள நிலையில், இனியும் தேர்தல் அரசியல் மூலம் அதை ஒருக்காலும் முடக்கிவிட முடியாது என்பது நிரூபணமாகிவிட்டது. பாசிஸ்டுகளுக்கு தேர்தல் அரசியல் என்பது ஓர் உந்து பலகைதானே தவிர, அவர்களின் உண்மையான பலம் நாடாளுமன்றத்திற்கு வெளியேதான் இருக்கிறது. தற்போது ஆட்சிக்கு வந்துள்ள இந்துத்துவ பாசிசக் கூட்டணி பலவீனமான நிலையிலேயே பதவியேற்றுள்ளது. அது தன்னை மேலும் பலப்படுத்திக் கொண்டு, பாசிசத்தை ஏந்திச் சுழற்றுவதற்கு முன், மிக விரைவாக இந்துத்துவ பாசிசத்தின் அனைத்து போக்குகளையும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். நாடாளுமன்ற - தேர்தல் அரசியலுக்கு வெளியே இந்துவெறி பாசிச சக்திகளுக்கு எதிராக, அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து போராடுவதுதான் அதை முறியடிப்பதற்கான துவக்கப்புள்ளியாக இருக்க முடியும்.

• குமார்



படிப்பகம்

பெரும் எண்ணிக்கையிலான கிரிமி னல்கள், வரலாற்றுப் புரட்டர்கள், ஊழல் பெருச்சாளிகளை இந்தத் தேர்தலில் வேட்பா ளர்களாக நிறுத்தின பாரதீய ஜனதாவும் அதன் கூட்டணிக் கட்சிகளும்.

இந்த பாரதீய ஜனதா கட்சிதான் ஊழலை ஒழிப்போம், அரசியலில் கிரிமனல் களைத் தடுப்போம் என வாய்கிழியப் பேசி வருகிறது. 12-ஆவது பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 27 கிரிமினல்களில் 15 பேர் பாரதீய ஜனதா கூட்டணியைச் சேர்ந்த வர்கள்.

• பீகாரில் பாரதீய ஜனதாவின் கூட்ட ணிக் கட்சியான சமதாக் கட்சி எம்.பி.யாக மகராஜ் கஞ்ச் தொகுதியில் வெற்றி பெற்றவர் பிரபுநாத் சிங். ஜனதா தள எம்.எல்.ஏ. அசோக் சிங்கைக் கொன்ற கொலை வழக்கு உட்பட 34 கிரிமினல் வழக்குகள் இவர் மீது பதிவாகியுள்ளன. இதில் 11 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக் கல் செய்யப்பட்டு வழக் குகள் நடைபெற்று வரு கின்றன.

• அதே சமதா கட் சியின் எம்.பி.யாக ககா ரியா தொகுதியில் வெற்றி பெற்றவர் சகுனி சவுத்ரி. 1995 மாநில தேர்தல் ஓட்டு எண்ணிக் கையின் போது காங்கி ரஸ் வேட்பாளர் உட்பட 6 பேரைக் கொன்றதில் முதன்மைக் குற்றவாளி இந்த சகுனி சவுத்ரி. 1996-ல் மூங்கேர் மாவட்டம் நவடாலில் 9 பேரைக் கொல்லத் திட்ட மிட்டுத் தந்ததே இவர் தான். இது போல பல கிரிமினல் வழக்குகள் இவர் மீது உள்ளன.

• கர்நாடக மாநி லம் கனாரா தொகுதி யில் வெற்றி பெற்றவர் பாரதீய ஜனதாவின் ஆனந்குமார் ஹெக்டே. இவர் மீது கொலை, கொலை முயற்சி, கலவரம் செய்தது, வன்மு றையைத் தூண்டியது என 15 வழக்குகள் பதிவாகி, பல வழக்குகளிலும் குற்றப் பத்தி ரிக்கை தரப்பட்டுள்ளது.

• உ.பி. மாநிலம் ஜலௌன் தொகுதி எம்.பி.யாக பாரதீய ஜனதாவின் பானு பிர தாப் வர்மா வென்றுள்ளார். கொலை, கொலை முயற்சி என பல கிரிமினல் வழக்குக ளில் சம்மந்தப்பட்டுள்ள இவர், காவல்துறை யின் கிரிமினல் பட்டியலில் பல ஆண்டுக ளாக உள்ளவர்.

• உ.பி.யில் ரேபரேலி தொகுதி பாரதீய ஜனதா எம்.பி.யாக வெற்றி பெற்றவர் அசோக் சிங். ஒரு கொலை வழக்கில் குற்றப் பத்திரிகை தரப்பட்டு வழக்கு நடக்கிறது. சட்ட விரோதமாகத் துப்பாக்கி வைத்திருந் தது, கலவரம் செய்தது, வன்முறையைத் தூண்டியது என எண்ணற்ற வழக்குகள் இவர் மீது உள்ளன.

• உ.பி.யில் கமிர்பூர் தொகுதி பா.ஜ.க. எம்.பி.யாக வெற்றி பெற்றவர் கங்காசரண் ராஜ்புத். 1976-லிருந்து கொலை, கொலை முயற்சி என எண்ணற்ற கிரிமினல் வழக்கு கள் இவர் மீது நடக்கிறது. சமூகவிரோதி என ஜலௌன் மாவட்ட காவல் துறையின் பதி வேட்டில் இவர் பெயர் பதிவாகி உள்ளது.

• மகாராட்டிரம் வடமேற்கு மும்பை தொகுதியில் வெற்றி பெற்ற சிவசேனா எம்.பி. மதுகர் சர்பொட்தர். 1993 பம்பாய் மதக் கலவரத்தை முன்னின்று நடத்தியவர்க ளில் ஒருவர். இருமுறை கிரிமினல் குற்றத்திற் காக சிறையிலடைக்கப்பட்ட இவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்திலும் சிறையிலிருந்தார்.

• முரளி மனோகர் ஜோஷி, தேவேந்திர பகதூர் ராய், லா.கி. அத்வானி, உமா பாரதி, சுவாமி சச்சிதானந் சாக்சி, விஜயராஜே சிந் தியா - பாரதீய ஜனதா எம்.பி.க்களாக வெற்றி பெற்ற இவர்கள் ஆறு பேர் மீதும் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் கிரிமினல் குற் றம் பதிவாகி குற்றப் பத்திரிகை தரப்பட்டுளது.

• வி. சத்தியமூர்த்தி - இராமநாதபுரம் அ.தி.மு.க. எம்.பி. முன்னாள் மாநில அமைச் சரான இவர் மீது வருமானத்துக்கு மீறிய சொத்து சேர்த்த வழக்கு நடக்கிறது. 35 சொத் துக்கள் வாங்கிய ஆதாரம் கைப்பற்றப்பட் டுள்ளது.

• சேடப்பட்டி முத்தையா - பெரியகு ளம் தொகுதி அ.தி.மு.க. எம்.பி. முன்னாள் தமிழக சபாநாயகரான இவரும் வருமா னத்தை மீறிய சொத்து சேர்த்த வழக்கில் சிக்கி யவர், ஊழல் தடுப்புச் சட்டம் 13(2), 13(1) (e) பிரிவுகளில் வழக்கு நடக்கிறது. மத்திய புலனாய்வுப் பிரிவு தொடர்ந்து விசாரித்து வருகிறது.

• முன்பு மதுராவில் வென்ற சுவாமி சாக்சியின் தொடர்ந்த கிரிமினல் நடவடிக்கை யால் வெறுப்படைந்த தொகுதி மக்கள் அவரை உள்ளே நுழைய விடாமல் விரட்டிய டித்ததால் வேறு வழியின்றி ஃபருக்காபாத் தில் போட்டியிட்டார். முற்றும் துறந்த சாமிய ராகிய இவர் இங்கு நின்றதற்குக் காரணம் இவரது 'சாதி'யினர் கூடுதலாக இருந்தது தான்.

• '96-ல் பா.ஜ.க. எம்.பி.யாக வென்ற மகந்த் அவைதயானந் தனக்கு எதிராக செயல்பட்டவர்களை மாஃபியா கும்பல் மூலம் கொன்றொழித்தவன். பெரிய பணக் கார, கௌரவமிக்க மத நிறுவனத்தின் மகந்த் (மத தலைவர்) ஆக இருக்கும் காரணத்தைக் காட்டியே கொலை வழக்கிலிருந்து தப்பி வருகிறான்.

# பா.ஜ.க.: கிரிமினல்களின் கூடாரம்

**தலைமை தொடங்கி அணிகள் வரை சித்தாந்தபூர்வ மாகவே கிரிமினல்மயமாக்கப்பட்ட பா.ஜ.க.விட மிருந்து நாட்டு மக்கள் நல்லாட்சியை எதிர்பார்க்க முடியாது.**




சமீபத்தில் புவ னேஸ்வரில் தேசிய செயற்குழு கூட்டத்தில் அத்வானி பேசிய அதே நேரம் டெல்லியில் ஒரு மனிதனை உயிரோடு கொளுத்தினான் மாவட்ட பாரதீய ஜனதா கட்சித் தலை வன், டில்லி முதல்வரின் மருமகன்கள் இருவர் சொத்துத் தரகர் ஒருவ ரைக் கொன்றதற்காகக் கைது செய்யப்பட்டனர்.

மத்திய பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மகா ராட்டிரம் என இவர்கள் ஆண்ட, ஆளும் மாநி லங்களில் நடந்த ஊழல் களைப் பட்டியலிட்டு மாளாது. இராஜஸ்தா னில் தற்போதைய தேர் தலில் பா.ஜ.க. தோற்ற தற்கு ஊழல் முக்கிய காரணம். பெண்கள் மீதான பெருகி வரும் பாலியல் வன்முறை கள் இன்னொரு காரணம்.

மகாராட்டிரத்தில் "என்ரான்" திட் டத்தை ஒழிப்பதாகக் கூறி ஓட்டுப் பொறுக் கிய இவர்கள், பெரும் கமிசன் வாங்கிக் கொண்டு ஒப்பந்தத்தைத் தொடர்கின்றனர். அம்மாநிலத்தில் மகாதேவ் சிவங்கர், சசி காந்த் சுடர் என்ற இரு அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு நாடு முழுக்க நாறியது.

பால் தாக்கரேயின் மருமகன் ராஜ் தாக் கரே 'கினி' என்பவரைக் கொன்ற குற்றச் சாட்டு, ஆட்சி அதிகாரத்தின் மூலம் அமுக் கப்பட்டுள்ளது. சிவசேனாவே ஒரு சட்ட பூர்வ மாஃபியா கும்பலாகத்தான் இயங்குகி றது.

பிணங்களின் மீதேறி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற லட்சியத்துடன் நாடு

www.padippakam.com

முழுவதுமே மதக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு நரவேட்டையாடியது பா.ஜ.க. நாடு முழுதும் மதக் கலவரங்களை நடத்தி ஆயிரக் கணக்கில் அப்பாவி முஸ்லிம்களைக் கொல்வதென்றால் வெறும் தொண்டர்களைக் கொண்டு மட்டும் இதைச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட படுகொலைகளைச் செய்ய பயிற்றுவிக்கப்பட்ட குண்டர்களைப் பெருமளவு கொண்டதுதான் பா.ஜ.க. கட்சித் தலைவர்களோ மிகப் பெரிய கிரிமினல்கள், வரலாற்றுப் புரட்டர்கள், ஊழல் திமிங்கலங்கள்.

• அத்வானி உட்பட பல பா.ஜ.க. தலைவர்கள் ஹவாலா ஊழல் பெருச்சாளிகள் தான். சட்டத்திலுள்ள ஓட்டைகளைக் கொண்டு தப்பி விட்டதாலேயே குற்றவாளி இல்லை என்றாகாது.

• பம்பாய் படுகொலைகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணா விசாரணைக் கமிசனை மகாராஷ்டிராவில் ஆட்சிக்கு வந்ததும் முடக்கினார்கள். '96-ல் 13 நாள் ஆட்சியின் போது தங்களை நியாயவான்கள் எனக் காட்டிக் கொள்ள, கமிஷனை உயிர்ப்பித்து நாடகமாடினர். இன்றோ மகாராட்டிர இந்து வெறி ஆட்சியாளர்கள் கமிசன் முடிவுகளை வெளியிட மறுக்கிறார்கள்.

• உ.பி.யின் ஆட்சியைத் தக்க வைக்க குதிரை பேரம் பேசி கட்சித் தாவல் மூலம் பெரும்பான்மை திரட்டினர். கொலை, கொலை முயற்சி, கடத்தல், கலவரம் என கொடுங் குற்றம் புரிந்த சமூக விரோதிகளான 16 எம்.எல்.ஏ.க்களை மந்திரிகளாக்கியுள்ளனர்.

• கட்சித் தாவலையும், கிரிமினல்களை மந்திரிகளாக்கியதையும் நியாயப்படுத்தி பேசிய வாஜ்பாயை நல்லவர் என்கின்றனர். 'மற்ற கட்சிகள் அயோக்கியத்தனம் செய்யும் போது அதிகாரத்திற்கு வர நாங்களும் எதையும் செய்வோம்' என்று பேசியவர்தான் வாஜ்பாய்.

• தொலைபேசித் துறையை தனியாருக்கு தாரை வார்த்து பல்லாயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்த காங்கிரசின் மத்திய அமைச்சர் சுக்ராமின் ஊழல் வெளிவந்த போது, பாராளுமன்றத்தையே ஒரு வாரம் நடக்கவிடாமல் செய்தது பா.ஜ.க. இன்று அதே சுக்ராம் கட்சியுடன் கூட்டு வைத்து இமாசலப் பிரதேசத்தில் கூட்டணி ஆட்சி அமைத்த பா.ஜ.க., அந்த ஊழல் பெருச்சாளியை, நாட்டின் பொருளாதாரத்தையே நிலைகுலைய வைத்த துரோகியை இமாசலப் பிரதேசத்தின் துணை முதல்வராக்கியுள்ளது.

• சுக்ராம் இமாச்சலப் பிரதேசத்தில் ஆட்சியைப் பிடிக்க தன்னுடன் கூட்டணி சேர்ந்தார் என்ற காரணத்திற்காக சுக்ராமின் மகனை ராஜ்யசபா எம்.பி.யாக்கி 'கேபினெட்' அந்தஸ்துள்ள மந்திரியுமாக்கியுள்ளது பா.ஜ.க.

• இரத யாத்திரை நடத்தி, முஸ்லிம்களை நரவேட்டையாடிய அத்வானி, இன்று சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் உள்துறை அமைச்சர்.

• அத்வானிக்கு சற்றும் குறைந்தவனல்ல என மனிதர்களைப் பிணங்களாக்கிய ஜோஷி, இன்று மனிதவள 'மேம்பாட்டு' அமைச்சர்.

இத்தகைய கடைந்தெடுத்த ஊழல் - கிரிமினல் கயவாளிகளிடம்தான் நாடு சிக்கிக் கொண்டுள்ளது. சட்டத்தையே கேலிக் கூத்தாக்கி ஆட்டம் போடும் இப்பாசிச கும்பலை சட்டபூர்வ - ஜனநாயக வழிமுறைகளின் மூலம் முறியடிக்கத்தான் முடியுமா? • முத்து

---



*• மார்ச் '98 பு.ஜ. இதழ் படித்தேன். இன்றைய சூழ்நிலையில் எனது சந்தேகங்களை தீர்ப்பனவாகக் கட்டுரைகளும், மக்களுக்கு பார்ப்பன பாசிசத்தின் கோர முகத்தை திரை கிழித்து காட்டுவதுமாகிய கட்டுரைகளும் அருமை.*

*அமெரிக்காவின் மேலாதிக்க வெறியையும், ராஜீவ் கொலை வழக்கு சம்பந்தமாக 26 பேருக்கு தூக்கு என்ற தீர்ப்பு குறித்த கட்டுரையும் இங்கு வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.*

*இந்த இதழில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் ஒவ்வொரு கட்டுரைக்கும் குறைந்தது 2 படங்களையாவது போட்டு எழுதியதுதான். கட்டுரை 2, 3, 4 எனப் பக்கங்கள் நீளும் போது, அது எவ்வளவுதான் முக்கியமான விசயமுள்ள கட்டுரை என்றாலும் படத்துடன் எழுதினால் போரடிக்காமல் படிக்கலாம்.*

*ஒரு கட்டுரையாவது வெளிநாட்டுக் கட்டுரையாக அம்மக்களின் போராட்டங்கள், ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை பற்றியனவாக இருப்பது மக்களிடம் வரவேற்பைப் பெறும். 2-3 இதழ்களுக்கு ஒரு முறையாவது வாசகர் கேள்வி - பதில், வாசகர் கடிதம் இவற்றை வைப்பது மக்களை பத்திரிகையுடன் தொடர்பு கொள்ளச் செய்யும். படித்தவர்கள் இறுக்கத்துடனும், எழுதுபவர்கள் ஒரு குறுகிய வட்டத்துடனும் இருப்பதை இதன் மூலம் தவிர்க்கலாம்.*

*கட்டுரைகளில் எழுத்து நடைச் சிக்கலாக இருக்கிறது. பு.ஜ. வெகுசன பத்திரிகையாக வளர்வதற்குத் தடையாக இருப்பதற்கு இதுவே பெரும் காரணம் என எண்ணுகின்றேன். கட்டுரைகள் பெரும்பாலும் ஒரு பெரிய பாராவிற்கு ஒரு முற்றுப்புள்ளி என்ற விதத்தில் வருகின்றன. இது கிரகிக்க கஷ்டமாக இருக்கிறது.*

*நம் இதழில்தான் சுத்தமான தமிழைக் காண முடிகிறது. அதைத் தொடருங்கள். ஆனால், அதைப் படிப்பவர் உணரும் வகையில், சாதாரண மனிதனும் படிக்கும் வகையில் குழந்தைக்கு தாய் சாதத்தை 'குழைந்து, பிசைந்து' தருவது மாதிரி தாருங்கள். பத்திரிகையின் வளர்ச்சிக்கு இது மிகவும் உதவும்.*

*ஆர். சுரேஷ்,*
*திருச்சி.*

*• புதிய பொருளாதாரக் கொள்கை பற்றியும், அதனால் மக்களுக்கு ஏற்படும் தீமையைப் பற்றியும் தெளிவாகக் கட்டுரை எழுதுங்கள். புற்றீசல் போல் வளர்ந்து வரும் தனியார் ஆங்கிலப் பள்ளியின் தரம், மொழித்திணிப்பு கொடுமை, ஆசிரியர்களின் அவல நிலை, மாணவர்களின் புத்தக சுமை, இருப்பிடம் போதிய வசதியின்மை, காற்றோட்டமின்மை, பொது மக்களிடம் வசூலிக்கும் அதிக அளவுக் கட்டணம், ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளம் மற்றும் சொசைட்டியின் தவறுகள், பஸ் ஸ்டாண்டில் சுகாதாரமற்ற அவல நிலை குறித்தும் எழுதுங்கள்.*

*ச. நாகலிங்கம், ஏர்வாடி.*

*• பு.ஜ. இதழின் (1-15 பிப்ரவரி '98) முகப்பு அட்டைப் படத்தை சிவக்குமார் என்ற பு.ஜ. வாசகர் பெரிய அளவில் வரைந்து, கூடுதலாக வாழப்பாடி, சுப்பிரமணிய சாமி ஆகிய இருவர் படத்தையும் சேர்த்து நான்கு நாய்களாக வரைந்து விழுப்புரம் நகரின் மையப் பகுதியான தாலுகா அலுவலகத்தின் எதிரில் உள்ள காமராசர் சிலைக்கு அருகில் கட்டியிருந்தார். தேர்தல் முடியும் வரை பலரது வரவேற்பைப் பெற்றது இந்தக் கேலிச் சித்திரம்.*

*தேர்தல் முடிந்த பின்பு, வெற்றி பெற்ற கூட்டத்தினர் சிலைக்கு மாலை அணிவிக்க 3.3.98 மாலை வந்த பொழுது, இத்தட்டியைக் கிழித்து எறிந்தனர். இத்தொகுதியில் வெற்றி பெற்ற ம.தி.மு.க. வேட்பாளர் செஞ்சி இராமச்சந்திரனின் ஆசியுடன், நகரின் முக்கிய அரசியல் பிரமுகர்கள், போலீசார், பத்திரிக்கை நிருபர் கண்ணெதிரிலேயே இந்த அநாகரிகம் அரங்கேறியது. ஆனாலும், எந்தவொரு பத்திரிகையும் அ.தி.மு.க. கூட்டணியினரின் இந்த அராஜகத்தை அம்பலப்படுத்தி எழுதவில்லை.*

*வாசகர் சிவக்குமார் தனது சொந்த ஆர்வத்தின் அடிப்படையில் செய்திருந்ததை, பி.ஜே.பி.யின் வானரங்கள் பிய்த்து எறிந்ததினால் கோபம் அடைந்த அவர், பு.ஜ. அட்டைப் படத்தை நகல் எடுத்து தினசரி, வார இதழ்களுக்கு அனுப்பியும் எவரும் கண்டு கொள்ளவில்லை.*

*பு.ஜ. வாசகர் வட்டம்,*
*விழுப்புரம்.*



படிப்பகம்

www.padippakam.com

## ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு மறைவு:

# ஆளும் வர்க்கங்கள் அழட்டும்!

இந்தியப் போலி கம்யூனிச இயக்கம் இன்னுமொரு தலைமைப் பூசாரியை இழந்து விட்டது. "ஈ.எம்.எஸ்" என்று கட்சிக்குள்ளும், நம்பூதிரிபாடு என்று வெளியிலும் பிரபலமாக விளங்கிய இலங்குளம் மணக்கல் சங்கரன் நம்பூதிரிபாடு, கடந்த மார்ச் 19-ஆம் தேதியன்று தனது 89-ஆவது வயதில் இறந்து போனார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் நிறுவனர்களில் ஒருவரான நம்பூதிரிபாடு, கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து சாகும் வரை அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினராகவும் 1977-லிருந்து 1992 வரை அக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்தார். நாடாளுமன்றத் தேர்தல் முறையின் மூலம் உலகிலேயே முதன் முறையாக போலி கம்யூனிச அரசாங்கத்தை கேரளாவில் நிறுவி, அதன் முதலமைச்சராகவும் இருந்தவர் என்ற 'பெருமை'யும் அவருக்கு உண்டு.

மற்ற பிற போலி கம்யூனிஸ்டுகளைப் போலவே நம்பூதிரியாரும் காந்திய - காங்கிரசுப் பாரம்பரியத்தில் ஊறியவர்தான். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட அவர், 1935-இல் காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே ஒரு பிரிவாக இயங்கிய காங்கிரசு சோசலிசக் கட்சியில் சேர்ந்து பின்னர் அதன் செயலாளரானார். அதன் பிறகு கேரளாவில் கம்யூனிஸ்டு கட்சியை நிறுவிய கிருஷ்ணப் பிள்ளையின் வழிகாட்டுதலில், கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து செயல்பட்டு, வெகு விரைவில் இந்தியாவின் கம்யூனிசத் துரோகிகளில் முக்கியமானவராகி விட்டார்.

"வலதுசாரிகளிடமிருந்து நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு ஆபத்து" எனக் கூச்சலிட்டுக் கொண்டு நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைக் காக்கும் முதன்மைத் தளபதியாகச் செயல்பட்டார் நம்பூதிரி. நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தி, நாடாளுமன்ற அராஜக அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி, இந்த அரசியல் அமைப்பைத் தகர்த்தெறிந்து மக்கள் ஜனநாயகத்தை நிறுவும் புரட்சிக்கான பிரச்சாரத்தைக் கூட மேற்கொள்ளாமல், நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கும் ஆளும் வர்க்கச் சேவையை அவர் விசுவாசத்துடன் செய்தார். ஆளும் வர்க்க நலன் பேணும் அரசு எந்திரத்துக்கு இசைவாக 'இடதுசாரி' கூட்டணி அரசாங்கத்தை நிறுவி, இதுவே புரட்சிக்கான இடைக்கால அரசு என்று மாய்மாலம் செய்தார். டாட்டா - பிர்லா கூட்டாளி; பாட்டாளிக்குப் பகையாளி என்று முழங்கிக் கொண்டே, 1958-இல் அவர் இடதுசாரி கூட்டணி அரசின் முதல்வராக இருந்த போது, மாவூரில் பிர்லாவின் குவாலியர் ரேயான் ஆலை நிறுவ விசுவாச சேவை செய்தார்.

காங்கிரசை வீழ்த்த ஜனதாவுடன் கூட்டு; மதவாத சக்திகளை முறியடிக்க காங்கிரசுடன் கூட்டு; கருணாநிதியின் ஊழலை எதிர்க்க எம்.ஜி.ஆருடன் கூட்டு; எம்.ஜி.ஆரின் அடக்குமுறை ஆட்சியை வீழ்த்த கருணாநிதியுடன் கூட்டு என்று மாறி மாறி நாற்காலி இசைப் போட்டி நடத்துவதே 'மார்க்சிஸ்டு' கட்சியின் கொள்கையாகிப் போனது. இதற்காக அரசியல் தரகு வேலை செய்வதையே கட்சித் தலைவர்களின் புரட்சிப் பணியாக்கினார். இதேபோல தொழிலாளர் இயக்கத்தை கூலி உயர்வுக்கான போராட்டத்தில் தள்ளி, பொருளாதாரவாத - சட்டவாத சகதிக்குள் மூழ்கடிப்பதில் முக்கிய பங்காற்றினார்.

காஷ்மீர், அசாம், ஈழம் போன்ற தேசிய இனப் பிரச்சினையாகட்டும், புதிய பொருளாதாரக் கொள்கை - தாராளமயம் போன்ற நாட்டை மறுகாலனியாக்கும் கொள்கையாகட்டும் தமது கட்சிக்கும் ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கும் அடிப்படையில் வேறுபாடு கிடையாது என்பதை நிரூபித்துக் காட்டினார். எல்லாவற்றுக்கும் மேலாக "வேதங்களின் நாடு" என்ற தனது நூலில் தத்துவ - வரலாற்றுப் புரட்டுகளைச் செய்து ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன ஆய்வாளராக மாறினார். இதனால் இந்துத்துவ ஆளும் கும்பலால் "இரண்டாவது சங்கரர்" என்று அன்போடு அழைக்கப்பட்டார்.

அசைவ உணவை விரும்பாத அவர், ஒரு முறை நேருவுடன் சேர்ந்து விருந்துண்ட போது அவருக்குப் பரிமாறப்பட்ட மீன் உணவை முகம் சுளிக்காமல் சாப்பிட்டார். இது பற்றி பத்திரிகையாளர்கள் ஆச்சரியத்துடன் கேட்ட போது, "க்காஷ்மீரி பிராமணர் (நேரு) அளிக்கும் உணவை கேரள பிராமணர் (நம்பூதிரியார்) எப்படி மறுக்க முடியும்?" என்று தனது உள்ளார்ந்த பார்ப்பனீயப் பற்றை வெளிப்படுத்தினார்.

தன்னை நாத்திகராக கூறிக் கொண்ட நம்பூதிரியார், தனது மனைவி கடவுளை வழிபடுவதை விமர்சித்து திருத்தவில்லை. துணைவியாரின் சுதந்திரம் - உரிமையில் நான் குறுக்கிட்டுத் தடையாக நிற்க மாட்டேன் என்று இதற்குச் சீரழிந்த திராவிட இயக்கத்தினரைப் போல சித்தாந்த விளக்கமும் அளித்தார். மனைவியின் வற்புறுத்தலுக்கு இணங்க, கோயில்களுக்கும் அவர் சென்றுள்ளார். தனது குழந்தைகளுக்கு சிறீதரன், சசிதரன், மாலதி, ராதா - என்று பார்ப்பனக் கடவுள்களின் பெயர்களைச் சூட்டி அகமகிழ்ந்தார்.

தொழிற்சங்க வாதமே கதி; சட்டமன்ற - நாடாளுமன்ற நாற்காலி சுகமே லட்சியம்; நவீன பார்ப்பனீயமே வாழ்க்கை நெறி என்பதை சித்தாந்த ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் செயல்படுத்தி பாட்டாளி வர்க்கத்தைச் சீரழிப்பதில் முதல்வராகத் திகழ்ந்தார்.

பங்காளிப் பாசம்: ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் இந்துவெறி பாசிசத் தலைவர் அத்வானி



அவரது எளிமையான வாழ்வு, இந்தக் கட்சியும் என்றைக்காவது புரட்சி செய்யும் என்ற பிரமையை கட்சி அணிகளிடம் ஏற்படுத்துவதற்குத்தான் பயன்பட்டுள்ளது. மற்றபடி, தமது கட்சித் தலைவர்களும் அவர்களது வாரிசுகளும் ஊழலில் ஈடுபட்டு சொத்து சேர்த்ததை அவர் என்றுமே எதிர்த்ததில்லை.

"அவரது மறைவு நாட்டிற்குப் பேரிழப்பு; உழைக்கும் மக்கள் என்றும் அவரை நினைவில் கொண்டிருப்பார்கள்" என்று எல்லா வண்ணப் புரட்டல்வாதிகளும், சர்வ கட்சியினரும் அவருக்கு அஞ்சலி செலுத்துகின்றனர். ஆம்! புரட்சிகர பாட்டாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் என்றும் அவரை நினைவில் கொண்டிருப்பார்கள். ஆளும் வர்க்கங்களின் ஐந்தாம் படைத் தளபதியாகச் செயல்பட்டு நாட்டுக்கும் புரட்சிக்கும் துரோகமிழைத்த நம்பூதிரியாரை மறக்க மாட்டார்கள். துரோக வரலாற்றிலிருந்து எதிர்மறைப் பிடிப்பினைகளைப் பெற்று புரட்சியில் முன்னேற குருச்சேவ், டெங் சியாவோபிங், டாங்கே, கல்யாண சுந்தரம், ராமமூர்த்தி முதலானோரோடு நம்பூதிரியாரையும் ஒரு கம்யூனிசத் துரோகியாக என்றும் நினைவில் கொண்டிருப்பார்கள்.

• பாரி



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு போலீசுக்கு பார்ப்பனர் வக்காலத்து

தமிழ்நாட்டுப் போலீசைப் பற்றியும், மத்தியப் புலனாய்வுக் கழகம் - சி.பி.ஐ. பற்றியும் பார்ப்பன - பனியா பத்திரிகைகளும் அவற்றின் வழிகாட்டுதலில் இயங்கும் அரசியல் வாதிகளும் கடந்த பல ஆண்டுகளாகவே சில தவறான கருத்துக்களைத் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். பார்ப்பன மயமாக்கப்பட்ட நடுத்தர வர்க்கமும் அதை அப்படியே நம்பவும் செய்கிறது. தற்போது கோவை குண்டு வெடிப்பு மற்றும் ராஜீவ் கொலை வழக்கு ஆகியவற்றை வைத்து அக்கருத்துக்கள் தீவிரமாகப் பரப்பப்படுகின்றன.

* "1964-க்கு முன்பு, அதாவது ராஜாஜி, காமராஜர், பக்தவச்சலம் ஆட்சிக் காலத்தில் எல்லாம் தமிழ்நாட்டுப் போலீசுதான் இந்தியாவிலேயே திறமை வாய்ந்ததாக இருந்தது. ஸ்காட்லாண்டு போலீசுக்கு நிகரான சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. ஆனால் 1967-இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் எல்லாம் கெட்டுக் குட்டிச் சுவராகி விட்டது. வட்டம், மாவட்டம் என்று கரை வேட்டிக்காரனெல்லாம் போலீசு ஸ்டேசனுக்குள் புகுந்து அதிகாரம், அட்டகாசம், உருட்டல் - மிரட்டல் செய்து நாசம் பண்ணிவிட்டார்கள்." - இப்படி ஒரு புராணக்கதைப் பிரசங்கம் நடக்கிறது.

* "இப்பவும் தமிழ்நாட்டுப் போலீசின் திறமையைக் குறைவாக மதிப்பீடு செய்து விட முடியாது. கோவை தொடர் குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு பல இடங்களிலும் அதிரடி சோதனைகள் நடத்தி, வெடிகுண்டுகள் உட்பட பயங்கர ஆயுதங்களைக் கைப்பற்றியதிலும், தடை செய்யப்பட்ட இசுலாமிய தீவிரவாத அமைப்பினரைக் கண்டுபிடித்துக் கைது செய்ததிலும் தமிழ்நாட்டுப் போலீசு காட்டிய திறமை வேறெந்த மாநில போலீசையும் விட இவர்கள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்லவென்று நிரூபிக்கின்றன.

ஆனால் குண்டு வெடிப்புகளுக்கு முன்பு தமிழ்நாட்டுப் போலீசின் கைகளைத் தி.மு.க. அரசு கட்டிப் போட்டிருந்தது.

தி.மு.க. அரசு இசுலாமியத் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இருப்பதால் தமிழ்நாட்டுப் போலீசு சுதந்திரமாகவும், துணிச்சலோடும் செயலாற்ற முடியாமற் போய்விட்டது. அப்படிச் செயல்படும் அதிகாரிகள் இடமாற்றம் செய்து தண்டிக்கப்படுகிறார்கள். இது போன்றுதான் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு பல விவகாரங்களிலும் போலீசுக்காரர்கள் செயல்படுகிறார்கள்."

* "24 மணிநேரமும் வேலை செய்யும் பொறுப்பில் உள்ள போலீசாருக்குத் தகுந்த ஊதியம் கிடையாது. அதனால்தான் இலஞ்ச - ஊழலில் ஈடுபடுகின்றனர். மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதப்படி போலீசாரின் எண்ணிக்கை இல்லை. எனவேதான், குற்றங்களைத் தடுக்கவும், விரைந்து புலனாய்வுகள் செய்து, குற்றவாளிகளைப் பிடிக்கவும், வழக்குகளை விரைவாக நடத்தித் தண்டிக்கவும் முடியவில்லை."

— மொத்தத்தில், பாதகமான வேலை நிலைமையும், அரசியல் தலையீடும்தான் போலீசின் திறமைக் குறைவுக்கும், தீங்கேட்டிற்கும் காரணம்; மற்றபடி தமிழ்நாட்டுப் போலீசு சிறப்பாகச் செயல்படக் கூடியதுதான் என்று பிரச்சாரம் செய்யப்படுகிறது.

* "மாநில அரசின் தலையீடு இல்லாமல் நேர்மையாகவும், சரியாகவும் விசாரணை நடைபெற வேண்டுமானால் சி.பி.ஐ. விசாரணைக்கு விடவேண்டும். ஆழமாகவும், மதிநுட்பமாகவும் புலனாய்வு செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், பாரபட்சமோ, தயவு தாட்சண்யமோ இல்லாமல், தொழில் சுத்தமாக வழக்குகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் சி.பி.ஐ.தான் அதற்குப் பொருத்தமானது. குறிப்பாக, மாநில அரசினர் சம்பந்தப்பட்ட வழக்குகளை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும்" என்று எதிர்க்கட்சிகள் கோருவது வாடிக்கையாகிவிட்டது.

அதேபோலத்தான் மாநில அரசுக்கு எதிராகப் பேரணியாகப் போய் ஆளுநரிடம் புகார் மனுக் கொடுப்பதும், அவர் மூலம் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும்கூட வாடிக்கையாகி விட்டது.

அரசியல் எதிர்த்தரப்பினர் வாதிடுவதைப் போல சி.பி.ஐ. ஒன்றும் மதிநுட்பம் வாய்ந்த புலனாய்வு அமைப்போ, நடுநிலையானதோ அல்ல. ஆட்சியிலுள்ளவர்களின் குற்றங்களை மூடி மறைக்கவும், குற்றவாளிகளைத் தப்புவிக்கவும், வழக்குகளைக் கிடப்பில் போடவும், அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும் பயன்படுத்தப்படும் கருவிதான் சி.பி.ஐ. என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத கிரிமினல் கும்பலாக நாடெங்கும் வளர்ந்துவிட்ட போலீசுதான் சிவில் சமூகத்துக்கே பெரும் எதிரி - ஆபத்தான மிருகம். இந்த உண்மையை மூடி மறைத்து, அதன்மீது நம்பிக்கை வைக்கும்படி செய்து, மக்களை ஏய்க்கவுமே பார்ப்பன - பனியா ஏடுகளும் அவற்றின் வழி காட்டுதலில் இயங்கும் அரசியல்வாதிகளும் போலீசுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் எப்போதும் வக்காலத்து வாங்குகின்றனர். குறிப்பாக, பார்ப்பன - பனியா கும்பல்கள் தேர்தல் மூலம் எம்.எல்.ஏ., எம்.பி. ஆவது குறைவாகிக் கொண்டே போனதாலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எ.ஃ.எப்.எஸ். தேர்வுகள் மூலம் அதிகாரத்தைப் பிடிப்பது அதிகமாக உள்ளது. ஆகவேதான் பொதுவில் அரசியல் மீதும், அரசியல் வாதிகள் மீதும் நம்பிக்கை இழக்கும்படியும், அரசு எந்திரத்தின் மீது நம்பிக்கை வைக்கும்படியும் பிரச்சாரம் செய்கின்றனர்.

அரசியல் தலையீடு காரணமாகத்தான் போலீசு கெட்டு நாசமாகிவிட்டது என்பது அப்பட்டமான பொய்யாகும். அத்திப்பட்டு விஜயா, தளி கல்பனா சுமதி, சிதம்பரம் பத்மினி - இப்படி ஆண்டுக்கு ஆயிரக்கணக்கான காவல் நாய்களின் பாலியல் வன்முறைக் குற்றங்களும், வாச்சாத்தி, சின்னாம்பதி போன்ற கிராமங்களில் புகுந்து கும்பல் கும்பலாகப் பாலியல் வன்முறைச் செயல்களிலும் ஈடுபடும்படியும் எந்த அரசியல் கட்சிகள் உத்திரவு போட்டன? போலீசு வெறிநாய்களின் கொட்டடிக் கொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் அரசியல்வாதிகளா காரணம்? காக்கிச் சட்டை போட்டுக் கொண்டே வழிப்பறிக் கொள்ளைகள் நடத்துகிறார்களே, நடைபாதை வியாபாரிகளிடமும், பிச்சைக்காரர்களிடம் கூட பொறுக்குகிறார்களே - இதெல்லாம் யாருடைய கட்டளைக்கு அடிபணிந்து செய்கிறார்கள்?

**சிதம்பரம் பத்மினி பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட வழக்கில் தண்டிக்கப்பட்ட போலீசாரை பத்திரிகையாளர்கள் புகைப்படம் எடுத்துவிடாதபடி மறைத்துக் கூட்டி வரும் தமிழகப் போலீசு; எல்லாவகை கிரிமினல்களையும் பாதுகாப்பதே போலீசின் வேலை**





படிப்பகம்

www.padippakam.com



தேனி மாவட்டம் சீலையம்பட்டி கிராம தாழ்த்தப்பட்ட பெண்களை மானபங்கப்படுத்திய போலீசாரை தண்டிக்கக் கோரி தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பினர் சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்: போலீசு சமூக விரோதிகளாகச் சீரழிந்து கிடப்பதே உண்மை.

மாதக்கணக்கில், வருடக்கணக்கில் விசாரணையின்றி, வழக்கு மன்றங்களையே பார்க்காமல், குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யாமல், பல ஆயிரம் பேர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் குற்றப்பத்திரிகை தயாரிப்பதற்குப் போதிய அதிகாரிகள் இல்லை; விசாரணைக் கைதிகளை வழக்கு மன்றங்களுக்கு அழைத்து வரப் போதிய போலீசும், வாகன வசதிகளும் இல்லை என்கின்றனர்.

காவல் பணிகளைச் செய்யாமல் பொறுக்குவது, கொள்ளையடிப்பது, இலஞ்சம் வாங்குவது ஆகிய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போலீசாரை யார் வேண்டுமானாலும் கைது செய்யலாம்; காவல் நிலைய வேலைகளோடு சம்பந்தமில்லாத வேலைகளுக்குப் பயன்படுத்தும் வாகனங்களை பறிமுதல் செய்யலாம் என்ற உரிமை மட்டும் இருந்தால் போலீசுத் துறையே கூண்டோடு சிறையிலடைக்கப்படாதா?

இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் இன்னும் பல கிரிமினல் குற்றங்களை எப்படிச் செய்வது, பிறகு அவற்றை எப்படி மூடி மறைத்துத் தண்டனையில்லாமல் தப்பிப்பது என்று அரசியல் வாதிகளுக்கு நுட்பமாகக் கற்று கொடுப்பதே இந்த அதிகாரிகளும் போலீசும்தான். பிறகு இவர்கள் அனைவரும் குற்றங்களில் பங்குதாரர்கள் ஆகிவிடுகிறார்கள்.

இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்றங்கள் எதிலும் எப்படி இதுவரை அரசியல் வாதிகள் தண்டிக்கப்படவில்லையோ, அது போலவே போலீசும் அதிகாரிகளும் தண்டிக்கப்பட்டதில்லை. முக்கியமாக அரசியல்வாதிகளே அவர்களுக்குத் துணை நிற்கிறார்கள். எங்காவது கற்பழிப்பு, சித்திரவதை, துப்பாக்கிச் சூடு கொலைகள் நடந்தால் அப்படிக் குற்றம் நடக்கவே இல்லை என்று மறைக்கவோ, அல்லது நியாயப்படுத்தவோ ஆளும் கட்சியும் அரசும் முயலுகின்றன.

எதிர்க் கட்சிகளோ நேரடி குற்றவாளிகளான போலீசைக் குறிவைத்துக் குற்றஞ்சாட்டுவதில்லை. ஆளும் கட்சியையும், மந்திரிகளையும்தான் குறிவைக்கின்றன. நடந்த குற்றத்தை வைத்து அரசியல் பிரச்சாரம் செய்து ஆதாயம் தேடிய பிறகு வழக்கையே மறந்து விடுகின்றன. இவ்வாறுதான் எவ்வளவு குற்றங்கள் செய்தாலும் சம்பந்தப்பட்ட போலீசும் அதிகாரிகளும் தப்பித்துக் கொள்கின்றனர்.

அரசியல்வாதிகளும் போலீசும் சேர்ந்து கிரிமினல் செயல்களில் ஈடுபட்டாலும், அரசியல்வாதிகளைப் போல அவ்வப்போது மக்களிடம் ஒட்டுப் பொறுக்கித்தான் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை போலீசுக்குக் கிடையாது. ஆதாயம் தேடி 'அரசியல்வாதிகள் கட்சிகளில் சேர்வதைப் போலத்தான் சம்பளம் - கிம்பளம், அதிகாரம் ஆகியவற்றுக்காக, பெரும்பாலும் இலஞ்சம் கொடுத்து போலீசில் சேருகிறார்கள். அவர்களிடம் போய் சட்டத்துக்கு விசுவாசமாக, மக்களுக்குச் சேவை செய்பவர்களாக, நாட்டு நலனே இலட்சியமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமில்லையா?

அதிகார வெறி தலைக்கேறிய ஒரு நாட்டின் சர்வாதிகாரியைப் போல, ஆயுத - வாகன வசதிகளுடன் ஒரு வட்டார ஆட்சி உரிமை பெற்றவர்களாக போலீசுக்காரர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். போலீசுக்காரர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இன்னொரு கிரிமினலான போலீசுக்காரருக்கே இருப்பதால் அவர்களைத் திருத்தவும் முடியாது. சுகபோக வாழ்வும் அதிகார வெறியும் இலட்சியமாகக் கொண்டுள்ள ஒரு கும்பலுக்கு, பயிற்சியின்போது நடத்தப் பெற்ற போதனையும், பதவியேற்பின் போது எடுத்துக் கொள்ளும் உறுதிமொழியுமே நெறி பிறழாமல் காக்கும் கவசமாக அமையும் என்று ஏற்பது இன்னொரு முட்டாள்தனம்.

பரபரப்பான வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வேகம்; கோவைக் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து நடந்த அதிரடி சோதனைகள், தேடுதல் வேட்டைகளில் நடந்த வெடிகுண்டு - ஆயுதம் கைப்பற்றுதல், கைதுகள், குறிப்பாக வாஜ்பாயி பதவியேற்ற நாளில் குண்டு வெடிக்காமல் தடுத்தது ஆகியவை தமிழ்நாட்டுப் போலீசின் திறமைக்குச் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன. இவையெல்லாம் அவர்கள் திறமையினால் நடப்பவையே அல்ல.

கிரிமினல்களுடன் போலீசுக்குள்ள நெருக்கமான உறவு - கூட்டுதான் பரபரப்பான சில வழக்குகளில் விரைவாகக் குற்றவாளிகள் பிடிக்கப்படுவதற்குக் காரணம். இதே காரணத்தால்தான் பல வழக்குகளில் அவர்கள் தப்பித்தும் கொள்கிறார்கள். ஒரு வட்டாரத்தில் குறிப்பிட்ட பருவ காலத்தில் என்னென்ன நோய்கள் பரவுகின்றன என்பதை அறிந்த மருத்துவர் விரைவான சிகிச்சை, விரைவான வியாபாரம் செய்வதைப் போலத்தான், போலீசும் கிரிமனல்களையும் குற்றங்களின் தன்மைகளையும் அறிந்து வைத்துள்ளனர்.

கண்டு பிடிக்கப்படும் குற்றங்களைவிட வழக்கே பதிவு செய்யாத, கிடப்பில் போடப்பட்ட குற்றங்களின் - வழக்குகளின் விகிதம் பன்மடங்காகும். மக்கள் தொகை பெருக்கத்தால் குற்றங்கள் பெருகி விட்டதாகவும், அதற்கேற்ப போலீசின் எண்ணிக்கை பெருவில்லை என்றும் கூறுகிறார்கள். இப்போதுள்ள போலீசின் எண்ணிக்கையும் அவர்களின் அட்டூழியங்களுமே தாங்க முடியவில்லை. இன்னும் பெருகினால் என்னாவது?

மேலும், இப்போது ஓரளவு துப்புத் துலக்குவதிலும், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கும் கூட நவீனத் தடயவியல் சாதனங்களும், போலீசின் அதிக எண்ணிக்கையும்தான் காரணங்களாக உள்ளன. ஏராளமான போலீசைக் குவித்து, அப்பாவி மக்களைத் துன்புறுத்தி - உதாரணமாக ஒன்று விடாமல் இசுலாமியர் வீடுகளில் சோதனையிடுவது - போக்குவரத்து - மக்கள் நடமாட்டத்தை முற்றாக நிறுத்தி வைத்து சில வழக்குகளைப் பிடிக்கிறார்கள். வெடிகுண்டு கண்டுபிடிப்பு என்றால் ஏற்கனவே போலீசுடன் தொடர்புடைய வெடிமருந்து தயாரிப்பு, கடத்தல் குற்றவாளிகள் மூலம் துப்புக் கிடைத்துதான் நடக்கிறது. குற்றவாளிகளை உருவாக்கியவர்கள், குற்றவாளிகளைப் பிடிப்பது ஒன்றும் பெரிதல்ல. மேலும் போலீசுடன் தொடர்புடைய கிரிமினல் - மா∴பியா கும்பல்கள்தான் ஏற்கனவே வெடிகுண்டு துப்பாக்கி போன்றவைகளை புழக்கத்தில் கொண்டு வந்தவை. அது கேள்விக்கிடமின்றி வளர்வது என்னவோ தொடர்கின்றது.

போலீசு மிருகங்களிடமிருந்தும், அது உருவாக்கி உள்ள கிரிமினல் - மா∴பியா கும்பலிடமிருந்தும் மக்கள் இனிதம் உயிரைக் காத்துக் கொள்வற்தே கூட ஆயுத பாணிகளாக்கிக் கொண்டு, அந்த எதிரிகளிடமிருந்து ஆயுதமேந்தும் ஏகபோக உரிமையைப் பறிக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. இந்த நிலையில் போலீசைச் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிப்பது நரவேட்டையாடும் மிருகத்திடம் நாமே இரையாகப் போய் நிற்பதைப் போன்றதுதான்!

• ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு - 1995 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஈரோட்டிற்கு அருகிலுள்ள பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த வேலு என்ற தொழிலாளி, "தனது சிறுநீரகத்தைத் தனக்குத் தெரியாமலேயே பெங்களூரைச் சேர்ந்த சில மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து பிரித்தெடுத்து விற்று விட்டதாக" போலீசில் புகார் கொடுத்தார். அதன்பின் தான் பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விசைத்தறி தொழிலாளர்கள், தாங்கள் பட்ட கடனை அடைக்க சிறுநீரகத்தை விற்று வருகிறார்கள் என்பது அம்பலமாகி, நாடே அதிர்ச்சிக்குள்ளானது.

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூர் சிறுநீரக விற்பனை மையமாகவும், பள்ளிப்பாளையம் சிறுநீரகப் பண்ணையாகவும் மாறிப் போனதை பல பத்திரிகைகளும் அடுத்தடுத்து அம்பலப்படுத்தி எழுதின. ஏழைகளின், கூலிகளின், தொழிலாளர்களின் வாழ்க்கை அவலம் நிறைந்ததுதான்; ஆனால், அந்த அவலம் எத்துணை ஆழமாகப் புரையோடிக் கிடக்கிறது என்பதை இச்சம்பவம் நாடெங்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியது.



சிறுநீரகத்தை விற்றும் கடன் தொல்லையில் இருந்து மீள முடியாத பள்ளிபாளையத்தைச் சேர்ந்த சுபாஷ்.

1987-ஆம் ஆண்டு தொடங்கியே பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளர்கள் சிறுநீரகத்தை விற்று கடனை அடைத்து வருவது அப்பகுதியெங்கும் அனைவரும் அறிந்ததுதான். ஆனால், அரசாங்கமும், ஓட்டுக் கட்சித் தலைவர்களும் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பின்தான் இந்த அவலத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதாக நாடகமாடினர். பின்னர் மைய அரசும், மாநில அரசாங்கங்களும் மனித உறுப்புகள் பணத்திற்காக விற்கப்படுவதைத் தடை செய்து சட்டமியற்றின. சட்டம் மந்திரக் கோலா என்ன, அதைத் தூக்கிக் காட்டியவுடன் தொழிலாளியின் வாழ்வில் வறுமை மறைந்து வசந்தம் வீசுவதற்கு?

• கோவிந்தன், பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளி. அவர் தனது மகளின் திருமணச் செலவுகளுக்காக கிட்டத்தட்ட 45,000 ரூபாய் கடன் வாங்கியிருந்தார். ஒன்னுக்கு நாலு தறியாக ஓடியாடி வேலை பார்த்தும் கூட, அவரால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. கடன்காரர்கள் கழுத்தில் கத்தியை வைக்க, வாங்கிய கடனை அடைக்க கோவிந்தனுக்கு தனது சிறுநீரகத்தை விற்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

• சுபாஷ் - பள்ளிபாளையத்தில் சிறு தேநீர் விடுதியொன்றை நடத்தி வந்தார். திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் அவரது கடை எரிந்து சாம்பலாகிவிட, சுபாஷ் பெரும் கடனாளியானார். தனது சிறுநீரகங்களுள் ஒன்றை விற்ற பின்னும் கூட, சுபாஷால் கடன் முழுவதையும் அடைக்க முடியவில்லை.

கோவிந்தனும், சுபாஷும் மிகச் சமீபத்தில் தங்கள் சிறுநீரகங்களை விற்றுள்ளனர். இவர்கள் இருவர் தவிர பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த இன்னும் எட்டு தொழிலாளர்கள் தங்கள் சிறுநீரகங்களை விற்பதற்காக சென்னைக்கும் பெங்களூருக்கும் சென்றிருப்பது பள்ளிப்பாளையத்தில் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. அங்கு ஓரளவு நல்ல ஆரோக்கியமுள்ள ஏழை விசைத்தறி தொழிலாளியின் சிறுநீரகத்தை இருபத்தையாயிரத்திலிருந்து முப்பதாயிரம் ரூபாய்க்குள் வாங்கி விட முடியும். இக் கொடிய சமூக அவலம், பள்ளிப்பாளையத்தையும் தாண்டி பவானிக்கு அருகிலுள்ள மற்றொரு நெசவுத் தொழில் நகரான குமாரபாளையத்துக்கும் பரவி வருகிறது.

சிறுநீரகங்களை விற்றதால் உடல் நலம் குன்றிப் போய், நடைப்பிணமாக வாழ்ந்து வரும் குமாரபாளையத்தைச் சேர்ந்த சுந்தரம் - சந்திரகலா தம்பதியினர்



பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த சுபாஷும், கோவிந்தனும், குமாரபாளையத்தைச் சேர்ந்த கர்ணனும் தங்கள் சிறுநீரகத்தை விற்பதற்கு அரசாங்கம் கொண்டு வந்துள்ள தடை சட்டத்திலுள்ள ஓட்டைகள் தான் பயன்பட்டுள்ளன. தரகர்கள் - அதிகாரிகள் - மருத்துவர்கள் என்ற ஒட்டுண்ணி சமூக விரோதக் கும்பலுக்கும் இந்த ஓட்டைதான் சாதகமாக உள்ளது.

தடைச் சட்டம் வந்தபின், கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் மட்டும் 517 பேர், தங்கள் உறவினர்கள் அல்லாத வெளி நபர்களுக்கு சிறுநீரகத்தை தானமாகக் கொடுத்துள்ளதாக அரசாங்கப் புள்ளி விபரம் கூறுகிறது. வறுமையின் காரணமாக சிறுநீரகம் விற்கப்பட்டு வருவதைத் தடுக்க வக்கற்ற அரசாங்கம்,



படிப்பகம்

www.padippakam.com



அவ்விற்பனையை "தானம்" என பூசி மெழுகுவதை அயோக்கியத்தனம் என்றுதான் கூற வேண்டும்.

கர்நாடகாவில் உள்ள "கர்நாடகா சிறுநீரக இயல் மற்றும் மாற்றுச் சிறுநீரக சிகிச்சை மையத்தில்" 1987 தொடங்கி 1995 ஆம் ஆண்டு வரை 580 மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. இவற்றுள் 400 சிறுநீரகங்கள் பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையத்தைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளர்களிடமிருந்து வாங்கப்பட்டுள்ளன. உடல் உறுப்புகளை விற்றால்தான் அத்தொழிலாளர்கள் வாழ முடியும் என்றால், அத்தொழிலாளர்கள் காலங்காலமாக கொத்தடிமைகளாக்கி மிகக் கொடூரமாகச் சுரண்டப்படுகிறார்கள் என்று தானே பொருள்.

தமிழக அளவில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு பேர் போனவை சேலம் - நாமக்கல் மாவட்டங்கள். இத்தொழிலை நம்பி கிட்டத்தட்ட 50,000 குடும்பங்கள் இவ்விரு மாவட்டங்களிலும் வாழ்ந்து வருகின்றன. எனினும், இந்தியாவிலேயே அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத தொழிலாளி வர்க்கத்துள், மிகக் கொடூரமானச் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாகி வருபவர்கள் இவ்விசைத்தறி தொழிலாளர்கள்தான்!



தறி முதலாளிகளிடம் வாங்கிய முன் பணத்தை அடைக்க முடியாததால் கொத்தடிமையாகச் சிறைபிடிக்கப்பட்ட பெண் தொழிலாளி அமராவதி

இம்மாவட்டங்களிலுள்ள விசைத்தறிக் கூடங்களில் ஒரு "ஷிப்ட்" என்பதே 12-லிருந்து 14 மணி நேரம் தான். இதுவே பல வேளைகளில் முதலாளிகளின் நிர்ப்பந்தத்தால் நீண்டு 24 மணி நேரமாகிவிடும். ஒரு ஷிப்டில் தொழிலாளி எத்துணை மீட்டர் துணி நெய்கிறானோ அதற்குத்தான் கூலி. இதனால் கால் வலியெடுத்து கெஞ்சினால் கூட, தொழிலாளி அசந்து உட்கார முடியாது. 'ஷிப்ட்' முடியும் வரை தறிக்கூடத்தையே சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும்.

மீட்டர் அளவிலும் மோசடிகள் செய்து, தொழிலாளியின் வயிற்றில் அடிக்கத் தயங்காதவர்கள் விசைத்தறி முதலாளிகள். இம்மோசடியை எதிர்த்துக் கேட்டாலோ அடி - உதை, திருட்டுப் பட்டம் எனத் தொழிலாளியை நிர்மூலமாக்கிவிடுவார்கள். இந்த வேலையை உதறிவிட்டு வேறு ஏதாவது வேலை தேடிக்கொள்ளலாமா என எண்ணுவதே இப்பகுதியில் உள்ள விசைத்தறி தொழிலாளிகளுக்கு அச்சமூட்டக் கூடியது. வேறு வேலை கிடைக்குமா என்பதை விட, அவனுக்கு அந்தச் சுதந்திரம் கூட கிடையாது என்பதுதான் உண்மை.

அதிகாரிகள் - போலீசின் கண்ணுக்கு எதிரேதான் இந்த நவீன கொத்தடிமை ராஜ்ஜியம் பல ஆண்டுகளாக கொடி கட்டிப் பறந்து வருகிறது.

குழந்தை தொழிலாளர் தடுப்புச் சட்டம், விபச்சாரத் தடுப்புச் சட்டம், கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் - இவை போன்ற சமூக அவலங்களை ஒழிக்க வந்த சட்டங்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ, அதே கதிதான் மனித உறுப்புகள் விற்பனைத் தடைச் சட்டத்திற்கும் நேர்ந்து வருகிறது. இச்சட்டத்திற்குப் புறம்பாக மனித உறுப்புகளை விற்பவர்களுக்கு 10,000 முதல் 20,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கவும், இரண்டு முதல் ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கவும் அரசிற்கு அதிகாரம் உண்டாம்!

விசைத்தறி கூடத்தில் தொழிலாளர்கள்: கொத்தடிமை வாழ்க்கை



யாருக்குத் தண்டனை கொடுப்பது? தனது சிறுநீரகத்தை விற்றால்தான் நாளை வாழ முடியும் என்ற அவலத்தில் தள்ளப்பட்டுள்ள விசைத்தறி தொழிலாளிக்கா? அல்லது அவனை அந்த அவலத்தில் தள்ளி விட்டுவிட்டு, உல்லாசமாக ஊர் சுற்றித் திரியும் ஓட்டுப் பொறுக்கி ஒட்டுண்ணிக் கும்பலுக்கா?

• ரஹீம்



படிப்பகம்

# 'வளர்ச்சி'யில் இந்திய விவசாயம் அழிவின் விளிம்பில் சிறு விவசாயிகள்

**விவசாயத் துறையில் நடைமுறைப்படுத்தப்படும் தாராளமயக் கொள்கைகளால் சிறு விவசாயிகளுக்கு அரசு வழங்கும் கடன்கள் குறைந்து போய், அவர்கள் கந்து வட்டிக் கும்பலிடம் மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது. போண்டியாகி நிற்கும் அவர்களின் நிலங்கள் சட்டபூர்வமாக அபகரிக்கப்பட்டு, முதலாளித்துவ பண்ணைகளாக மாற்றப்படுகின்றன.**

"முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளர்கள் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள்" என்ற கேள்விக்கு, "அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்து விட்டார்கள்" என்று ஒரு வித நையாண்டி கலந்த, அச்சமூகத்தின் சுரண்டலைத் தோலுரித்துக் காட்டும் பதில் கூறப்படுவதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தப் பதில் நமது நாட்டு விவசாயிகளின் வாழ்க்கைக்கும் பொருத்தமாகி விட்டது.

தாராளமயமாக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட பின், நமது நாட்டு விவசாயம் ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டைவிடக் கூடுதலாக 4 சதவீத வளர்ச்சியை எட்டிப் பிடித்து வருவதாகவும், விவசாயத் துறையில் கட்டுமான சீர்திருத்தங்கள் செய்ததன் காரணமாகவே இந்த வளர்ச்சியைச் சாதிக்க முடிந்ததாகவும் ஆட்சியாளர்கள் அடித்துக் கூறுகின்றனர். அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால், பீற்றிக் கொள்ளப்படும் இந்த வளர்ச்சி நாடெங்குமுள்ள கோடானுகோடி சிறிய, நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கையில் அள்ளிக் கொடுத்தது என்ன என்பது தான் பரிசீலனைக்குரியது.

ஆந்திராவின் குண்டூர், கரீம் நகர் மாவட்டங்களைச் சேர்ந்த 149 பருத்தி விவசாயிகள், கடந்த மூன்று மாதங்களில் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயினர். இது அம்மாநில அரசாங்கமே தரும் புள்ளி விபரம். எதிர்க்கட்சிகளோ தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 250 மேலிருக்கும் என சத்தியம் செய்து, சட்டசபைக்குள்ளேயே ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

தற்கொலை செய்து கொண்ட இவ்விவசாயிகளுள் பெரும்பாலோர் ஓரிரு ஏக்கர் விளை நிலத்தை சொந்தமாகக் கொண்டுள்ள சிறு விவசாயிகள். காலந்தவறிய பருவ மழையால் பயிர்கள் பாதிக்கப்பட்டதோடு, பருத்திப் பயிரை அழிக்கும் பூச்சிகள் பெருக்கத்தால் இவ்விசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உரம், பூச்சி மருந்துகளுக்காக ஒரு ஏக்கருக்கு ரூ. 12,000-க்கும் மேல் செலவிட்டும் பூச்சிகள் அழியவில்லை. பருத்தி மண்டி வியாபாரிகளிடம் வாங்கிய கடன் தான், வட்டி, வட்டிக்கு வட்டி எனக் கூடிக் கொண்டே போனதே தவிர, கடந்த மூன்று ஆண்டுகளாக பருத்தி விளைச்சல் உயரவில்லை; விரக்தி அடைந்துபோன விவசாயிகள், பருத்தி பூச்சியை அழிக்க வாங்கி வைத்திருந்த மருந்தைக் குடித்தே தற்கொலை செய்து கொண்டனர்.

• கர்நாடகா மாநிலத்திலுள்ள பிதார் மற்றும் குல்பர்கா மாவட்டங்களைச் சேர்ந்த 9 விவசாயிகள் கடந்த பிப்ரவரி மாதம் பூச்சி மருந்தைக் குடித்து தற்கொலை செய்து கொண்டனர். காரணம் ஒன்றும் புதிதல்ல. ஆந்திராவில் நடந்ததைப் போன்றே, இவ்விவசாயிகள் பயிரிட்டிருந்த உளுந்துப் பயிரை காலம் தவறிப் பெய்த கன மழையும், படையெடுத்து வந்த பூச்சிகளும் சேர்ந்து அழித்துவிட்டன. பயிர் செய்ய வாங்கிய கடன் சுமையாக அழுத்த, இவ்வறிய விவசாயிகளுக்கு தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.

பிதார் மாவட்டம் முழுவதும் 39,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயறு வகைகள் அனைத்தும் பூச்சி தாக்கி மடிந்து போனதால், அம்மாவட்டத்தைச் சேர்ந்த பயறு விவசாயிகள் அனைவருமே மீள முடியாத கடன் வலைக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர்; ஒவ்வொருக்கும் ரூ. 20,000/- தொடங்கி ரூ. 90,000/- வரை கடன் இருக்கலாம்.

அம்மாநிலம் எங்குமே 1.6 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயறு வகைகள் பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளதால், பயறு விவசாயிகளுக்கு 52 கோடி ரூபாய் கடன் இருக்கலாம் என மதிப்பிட்டுள்ளது மாநில அரசு.

நட்டமடைந்துள்ள ஒவ்வொரு விவசாயிக்கும், குறைந்தபட்சம் இரண்டாயிரம் ரூபாய் நட்ட ஈடு வழங்கப் போவதாக மாநில அரசு அறிவித்துள்ளது. "இதைக் கேட்டு அழுவதா இல்லை சிரிப்பதா என்றே தெரியவில்லை" என்கிறார் 70,000 ரூபாய் கடன்பட்டுள்ள பாபுராவ் பிராஜி என்ற விவசாயி. நட்ட ஈடு அற்பமாக இருந்தாலும், அது விவசாயிகளின் கைகளுக்கு வந்தவுடனேயே கொத்திக் கொண்டு போக கந்து வட்டிக் கும்பலும், பூச்சி மருந்து வியாபாரிகளும் கழுகுகளைப் போல கிராமந்தோறும் காத்திருக்கின்றனர்.

• பசுமைப் புரட்சியின் வெற்றிக்கும், நவீன விவசாய உற்பத்தியின் வளர்ச்சிக்கும் பஞ்சாபை உதாரணமாக எடுத்துக் காட்டுவது ஆட்சியாளர்களின் வழக்கம். ஆனால், இந்த 'வளர்ச்சி'க்கு பஞ்சாப் மாநில விவசாயிகள் கொடுத்திருக்கும் விலை மிகப் பெரியது. கிட்டத்தட்ட 5,700 கோடி ரூபாய் கடனில் அம்மாநில விவசாயிகள் மூழ்கிப் போயுள்ளனர். இதில் 46 சதவீதக் கடனை, அம்மாநில விவசாயிகள் கந்து வட்டிக்காரர்களிடமும், மண்டி வியாபாரிகளிடமும் வாங்கியுள்ளனர். மொத்தக் கடனில் 7 சதவீதம் கடன் பொருட்கள் - சொத்துக்களை

**தற்கொலை செய்துகொண்ட ஆந்திர மாநிலத்து பருத்தி விவசாயி ஒருவரின் குடும்பம். நெல் பயிரிட்டுக் கொண்டிருந்த விவசாயிகளை பருத்தி பயிரிட்டு இலாபம் சம்பாதிக்கலாம் என ஆசை காட்டி மோசம் செய்த அரசே குற்றவாளி!**





படிப்பகம்

www.padippakam.com

அடகு வைத்துப் பெறப்பட்டுள்ளது; 13 சதவீதக் கடன் அன்றாடக் குடும்பச் செலவுகள், எதிர்பாராத மருத்துவச் செலவுகள், திருமணம் போன்றவற்றிற்காகப் பெறப்பட்டுள்ளது.

• வாங்கிய கடனை உடனே அடைக்கச் சொல்லி கந்து வட்டிக் கும்பல் கொடுத்த நெருக்கடி காரணமாக, முதுகுளத்தூரைச் சேர்ந்த சேது என்ற விவசாயி, முன்னூறு ரூபாய்க்கு விற்க வேண்டிய நெல் மூட்டைகளை, எழுபது ரூபாய் குறைவாக, மூட்டை ஒன்றினை ரூ. 230-க்கு இடைத் தரகர்களிடம் விற்றுள்ளார். கடன், வட்டி என்ற சுமையோடு, நெல் மூட்டைகளையும் அடிமாட்டு விலைக்கு விற்றதால், அவருக்குக் கிடைக்க வேண்டிய கொஞ்ச நெஞ்ச இலாபத்தையும் இந்த ஒட்டுண்ணிக் கும்பல் அபகரித்துக் கொண்டு விட்டது.

முதுகுளத்தூரைச் சேர்ந்த ராஜசேகர் என்ற விவசாயி, ''கிராம நிர்வாக அலுவலர்கள் வேண்டுமென்றே விவசாயிகளுக்குச் சான்றிதழ் வழங்காமல், அதன் மூலம் அவர்கள் விளைந்த நெல்லை அரசிடம் விற்றுவிடாமல் முட்டுக் கட்டை போட்டு, இடைத் தரகர்களிடம் விற்கும்படியான நெருக்கடியை இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு உருவாக்குகிறார்கள்'' எனக் குற்றஞ் சுமத்துகிறார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு நெல் கொள்முதல் செய்வதை, முறையாகவோ தொடர்ச்சியாகவோ நடத்துவது கிடையாது. நெல் கொள்முதல் அறிவிக்கப்பட்டாலும், விவசாயிகளுக்கு முறையான தகவல் கொடுக்காமலும், பல்வேறு இடங்களில் கொள்முதல் மையங்களைத் திறக்காமலும் ஏனோதானோவென்று நடத்தி முடித்து விடுகின்றனர். இதனால், விவசாயிகள் இடைத் தரகர்களை அண்டித்தான் வாழ முடியும் என்ற கேடுகெட்ட நிலையை உருவாக்கியுள்ளனர்.

வானம் பார்த்த பூமியான இராமநாதபுர மாவட்டத்தில் மட்டுமல்ல; ஓரளவு பாசன வசதி மிக்க திருநெல்வேலி மாவட்டத்திலும் இதே நெருக்கடியை உருவாக்கி வருகிறது, தமிழக அரசு. அம்மாவட்டத்தில் இந்த ஆண்டு நடந்த இருபோக சாகுபடியிலும் நெல் விளைச்சல் அமோகமாக இருந்தது. ஆனால், நெல் கொள்முதல் நிலையங்களைப் பரவலாகத் திறக்கவில்லை தமிழக அரசு.

இம்மாவட்டத்தின் நெற்களஞ்சியமான அம்பை தாலுகாவில் ஒரே ஒரு இடத்தில் தான் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. இத்தாலுகாவில் இன்னும் நான்கு கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை தமிழக அரசு காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

தொலை தூரத்தில் இருந்த சிறு/நடுத்தர விவசாயிகளால் விளைந்த நெல்லை கொள்முதல் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல முடியவில்லை; தங்களது வீடுகளிலும் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க முடியவில்லை. இதனால், அவர்கள் வெளிச் சந்தையில் நெல்லை விற்றுவிட முனைந்தனர். சந்தையில் நெல் வரத்து அதிகமானதால், விலை கிடுகிடுவெனச் சரிந்து, நெல்லுக்கும் தவிட்டுக்கும் விலையில் பெரிய வித்தியாசமில்லை என்ற மோசமான நிலை உருவானது. சாகுபடி செய்ய போட்ட முதலுக்கு பாதிகூடத் தேறாமல், சந்தை சூதாட்டத்தின் பகடைக் காயாக மாறிப் போனது அப்பகுதி விவசாயிகளின் வாழ்க்கை.

ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிட்டு அறுவடை செய்வதற்கு சராசரியாக மொத்த உற்பத்திச் செலவு ரூ. 4000 வரை ஆகிறது. ஆனால், விளைந்த நெல்லை விற்பனை செய்தால் விவசாயிக்கு கிடைக்கும் வருவாயோ கிட்டத்தட்ட ரூ. 5000 தான். நாலாயிரம் ரூபாய் முதலீடு செய்து, நான்கு மாதம் முதுகொடிய பாடுபடும் விவசாயிக்கு கிடைக்கும் ஆயிரம் ரூபாய் இலாபத்தை வைத்துக் கொண்டு, அவன் குடும்பம் இரண்டு வேளை சோறு திண்பதே சிரமம்தான். இதனால், தமிழக நெல் விவசாயிகள் நெல் பயிரிடுவதைக் கைவிட்டு, பணப் பயிர் போடுகிறார்கள் அல்லது நிலத்தையே தரிசாகப் போட்டுவிட்டு, வேறு தொழிலுக்கு மாறிவிடுகிறார்கள்; அல்லது நகரத்தில் கூலி வேலை தேடிச் சென்று விடுகிறார்கள். போட்ட முதலுக்கு ஏற்றபடி, நெல்லின் விலையை அரசு நிர்ணயிக்காவிடில், சிறு/நடுத்தர விவசாயிகள் நட்டமடைவதையும், போண்டியாவதையும், நிலத்தைத் தரிசாகப் போடுவதையும் தடுக்க முடியாது.

★☆★

**தா**ராளமயமாக்கம் - உலகமயமாக்கத் தின்படி, இந்திய அரசு விவசாயத் துறையை மெல்ல. மெல்ல கைகழுவி வருவதனால் தான், முன்னைக் காட்டிலும் மோசமாக இந்திய விவசாயிகளின் வாழ்க்கையை கந்து வட்டிக் கும்பலும், இடைத் தரகர்களும், வர்த்தகச் சூதாடிகளும் சூறையாடத் தொடங்கியுள்ளனர்.

சென்ற ஆண்டு மைய அரசின் வரவு - செலவு திட்டத்தில் விவசாயத்திற்காக 18.807 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்தொகை அதற்கு முந்தைய ஆண்டைவிட 500 கோடி ரூபாய்தான் கூடுதலாகும். எனினும், மொத்த தேசிய உற்பத்தியோடு ஒப்பீடும் பொழுது, விவசாயம், பாசன மேம்பாடு, கிராமப்புற வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதி, 1991-ஆம் ஆண்டு தொடங்கி படிப்படியாகக் குறைந்தே வந்துள்ளது. 1989-90-ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத்திற்கு 1.99 சதவீத நிதி ஒதுக்கப்பட்டது. இது, சென்ற நிதியாண்டில் 1.29 சதவீதமாகக் குறைந்து போனது.

நிதி ஒதுக்கீடு குறைந்து வருவதால், அதைச் சாக்கிட்டு, புதிய பாசனத் திட்டங்களை உருவாக்குவதில் மைய - மாநில அரசுகள் அக்கறை காட்டுவதில்லை. ஏற்கனவே இருந்து வரும் பாசன வாய்க்கால்களை முறையாகப் பராமரிப்பதில்லை. உள்நாட்டில் விவசாய ஆராய்ச்சிகள் முடக்கப்பட்டு விடுகின்றன. வறட்சி, புயல், மழை, வெள்ளம், பூச்சி தாக்குதல் போன்ற இயற்கை சீற்றங்களால் பயிர்கள் நாசமடைந்து போகும் பொழுது, அவர்களுக்கு உரிய நட்ட ஈடு கூட வழங்குவதில்லை.

நட்ட ஈடு வழங்காதது ஒருபுறம் இருக்கட்டும்; மத்தியப் பிரதேச மாநிலத்தில் நட்ட ஈடு கேட்டுப் போராடிய விவசாயிகளின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, 50 விவசாயிகளின் உயிரையே பறித்துவிட்டது காங்கிரசு அரசு. கர்நாடகா மாநிலத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பூச்சிகளின் படையெடுப்பால் பயறு வகைப் பயிர்கள் நாசமாகி வருவது வாடிக்கையாகி விட்ட போதும், இதைத் தடுக்க அரசிடம் எவ்விதத் தொலை நோக்குத் திட்டமும் கிடையாது.



கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்ட கர்நாடகாவைச் சேர்ந்த பயறு விவசாயி ஒருவரின் மனைவி கஸ்தூரி பாயும், அவரது குழந்தைகளும்: இருண்ட எதிர்காலம்

விவசாயத் துறையில் முதலீடு செய்யப்படும் தொகையை, மைய அரசு தனது சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து திரட்டுவது கிடையாது. இதில், ஒரு பகுதி உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடம் இருந்து தான் கடனாகப் பெறுகிறது. கடன் கொடுக்க முன் வரும் அவை, ''விவசாயத்திற்கு கடன் - மானியம் வழங்குவதை படிப்படியாகக் குறைக்க வேண்டும்; நட்டத்தில் இயங்கும் கிராமப்புற வங்கிக் கிளைகளை மூட வேண்டும்; வறுமை ஒழிப்புத் திட்டங்களை ரத்து செய்ய வேண்டும்'' எனக் கட்டளைகள் இடத் தவறுவது கிடையாது.

பஞ்சாப் மாநில விவசாயிகள் பெற்றுள்ள மொத்தக் கடனில் (ரூ. 5700 கோடி), 19 சதவீதக் கடனைத்தான் வங்கிகள் வழங்கியுள்ளன; 27 சதவீதக் கடனை கூட்டுறவு வங்கிகள் வழங்கியுள்ளன. மீதி 54 சதவீதக் கடனை அவர்கள் கந்து வட்டிக் கும்பலிடம் இன்றி வேறு யாரிடம் பெற்றிருக்க முடியும்? உத்திரப் பிரதேச மாநிலத்தின் மேற்குப் பகுதியில் உள்ள கிராமப்புற ஏழை மக்கள், தாங்கள் பட்ட கடனில் 15 சதவிதத்தை தான் வங்கிகளிடமிருந்து பெற்றுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

முதுகுளத்தூருக்கு அருகேயுள்ள மேல் பாரங்கரை கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி என்ற விவசாயி, ''கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு கடன் வழங்க முன்வருவதில்லை; இதனால் அவர்களின் தலை எழுத்தைத் தீர்மானிப்பவர்களாகக் கந்து வட்டிக் கும்பல் மாறிவிட்டது'' என்கிறார். விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் அரசு காட்டிவரும் இந்த அலட்சியப் போக்கினால்தான் ஆந்திர - கர்நாடகா விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ள நேரிட்டது.

மாநில மின்சார வாரியங்கள் நட்டமடைவதைத் தடுக்க, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதையும், மின் கட்டணச் சலுகை அளிப்பதையும் நிறுத்த வேண்டும் என ஏகாதிபத்தியங்கள் கட்டளையிடுகின்றன. இக்கட்டளையை ஆந்திரா, அரியானா மாநில அரசுகள் உடனே செயற்படுத்தின. அரியானாவில் மின் கட்டண உயர்வை எதிர்த்து, அம்மாநில விவசாயிகள் நடத்திய போராட்டத்தை, பா.ஜ.க. கூட்டணி அரசு இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது.

விவசாய விளை பொருட்களின் விலையைத் தீர்மானிப்பதை சந்தையிடம் விட்டுவிட வேண்டும்; எனவே, அரசு நெல், கோதுமை போன்ற உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வதைக் குறைக்க வேண்டும் என உலக வர்த்தகக் கழகம் நிபந்தனை விதித்து வருகிறது. இக்கட்டளை விவசாயிகளுக்கு மட்டும் பாதகமானதல்ல; நாளை உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலை வருமானால், சகல தரப்பு உழைக்கும் மக்களும் பட்டினிச் சாவுக்குள் தள்ளப்படும் அபாயம் நேரிடும்!

தாராளமயமாக்கலின் முன்பு வரை உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதுதான் இந்திய அரசின் விவசாயக் கொள்கை. இப்பொழுதோ விவசாயத்தை உலகமயமாக்குவதுதான் ஆட்சியாளர்களின் நோக்கம்.

''இந்திய விவசாயத்தை ஏற்றுமதி சார்ந்ததாக மாற்றியமைப்பதோடு, அதனை முதலாளித்துவ நிறுவனமய்மாக்குவது; விவசாய உற்பத்தியை மாற்றியமைத்து, அதாவது அத்தியாவசிய உணவுப் பொருள் உற்பத்தியை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டு, ஏற்றுமதி மதிப்பு கொண்ட உணவுப் பொருட்கள், பழ வகைகள், பூக்கள், காய்கறிகள், முந்திரி, காரவகைப் பொருட்கள் மற்றும் பால் பொருட்களை உற்பத்தி செய்ய அதிக முக்கியத்துவமளிப்பது. இதற்குத் தகுந்தாற்போல கிராமப்புற தொழில்களை மாற்றியமைப்பது'' இது, சென்ற ஆண்டு நடந்து முடிநத மாநில விவசாய அமைச்சர்கள் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவாகும்.

சுருக்கமாகச் சொன்னால், பிரிட்டன் காலனியாதிக்கவாதிகள் தங்கள் தேவைக்கேற்றபடி இந்திய விவசாயத்தை மாற்றியமைத்ததைப் போல, இப்பொழுது ஓட்டுக் கட்சிகளால் ஏகாதிபத்திய நாடுகளின் தேவையை நிறைவு செய்யும் பின்புலமாக இந்திய விவசாயம் மீண்டுமொரு முறை மாற்றியமைக்கப்படுகிறது. இதற்குத் தகுந்தாற்போல், இறால் பண்ணைகள் அமைப்பது கூட விவசாய உற்பத்தி சார்ந்ததுதான் என விவசாயக் கொள்கைகளும், விதிகளும் திருத்தப்படுகின்றன. விவசாய நிலங்களை தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் ஆக்கிரமித்துக் கொள்ள வசதியாக, கர்நாடகா மாநில ஜனதா தள அரசு நில உச்ச வரம்பு சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து, பிற மாநிலங்களுக்கும் 'வழி காட்டியது'!



பணப் பயிருக்கு மாறியும் வாழ்வில் வசந்தம் வீசவில்லை. கரும்புக்கு அதிகம் விலை நிர்ணயம் செய்யக் கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தும் தமிழக கரும்பு விவசாயிகள்

இந்திய விவசாயத்தை முதலாளித்துவப் பண்ணைகளாக மாற்றியமைப்பதற்கு, ஆட்சியாளர்கள் மூப்பனார் போன்ற பண்ணையார்களிடம் சட்ட விரோதமாகக் குவிந்து கிடக்கும் நிலங்களின் மீது கை வைக்கவில்லை; மாறாக, கடன் வலையில் சிக்குண்டு போண்டியாகத் திரியும் சிறு / நடுத்தர விவசாயிகளின் நிலங்கள்தான் குறி வைத்து வளைக்கப்படுகின்றன.

சுதந்திரமாக, தன் விருப்பம்போல் பயிர் செய்து வந்த விவசாயிகளை பன்னாட்டு நிறுவனங்களின் / தரகு முதலாளித்துவ நிறுவனங்களின் ஒப்பந்தக்கார விவசாயிகளாக மாற்றுவது; தரிசாகக் கிடக்கும் சிறு / நடுத்தர விவசாயிகளின் நிலங்களை வளைத்துப் போட்டு சொந்தப் பண்ணைகளை அமைப்பது - இந்த வழிகளின் மூலம்தான் இந்திய விவசாயத்தை முதலாளித்துவ நிறுவனமயமாக மாற்றுகிறார்கள்.

• பஞ்சாபில் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான பெப்சி கோலா, தனக்குத் தேவைப்படும் உருளைக் கிழங்கு, தக்காளிகளைப் பெறுவதற்காக ஒப்பந்த விவசாயத்தைப் புகுத்தியுள்ளது. உத்திரப் பிரதேச மாநில உருளைக் கிழங்கு விவசாயிகளையும் தத்தெடுத்துக் கொள்ளுமாறு இப்பன்னாட்டு நிறுவனத்திடம் வேண்டி வருகிறார், அம்மாநில முதல்வர் கல்யாண் சிங்.

• தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில், சிதம்பரபுரம், உலகங்குளம், தெற்கு காரக்குறிச்சி, பனகுடி, பள்ளி வாசல் போன்ற கிராமங்களில் தரிசாகக் கிடந்த ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைத் திடீர் பணக்காரக் கும்பலும், ''என்பீல்டு'', ''மேக்ஸ்வொர்த்'' போன்ற நிறுவனங்களும் வளைத்துப் போட்டுள்ளன. கம்பு, சோளம், ராகி, நிலக்கடலை போன்ற மானாவாரிப் பயிர்கள் விளைந்த இடத்தில் இப்பொழுது தேக்கு, தென்னை, கொய்யா, முந்திரி, சவுக்குப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

• தமிழ்நாட்டில் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் அனுபவ் பிளாண்டேசன், மேக்ஸ்வொர்த், வி.ஜி.பி., டான்பரோ போன்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், வெளிநாட்டு இந்தியர்களுக்குச் சொந்தமான சில நிறுவனங்களும் 4000 ஏக்கர் பரப்பில் தேக்குப் பண்ணைகளையும், காய்கறித் தோட்டங்களையும் அமைத்துள்ளன.

• நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதியில் - தமிழ்நாடு தொடங்கி மேற்கு வங்கம் வரை இறால் பண்ணைகள் புற்றீசல்கள் போல் பெருத்துப் போயுள்ளன.

• டாடா, ஐ.டி.சி., டாபர், எஸ்ஸார், பிர்லா, இந்துஸ்தான் லீவர், ஆர்.பி.ஜி., கல்யாணி போன்ற பெரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் கோடிக் கணக்கான ரூபாய் முதலீட்டில் பண்ணைகள் அமைத்து, காய்கறிகள், பூ - பழவகைகளையும் பயிரிட்டு ஏற்றுமதி செய்து வருகின்றன.

முன்பெல்லாம், விவசாயிகளுக்கு தலைக்கு மேல் கடன் இருந்தாலும், அவர்கள் தங்களது உடமை என்று சொல்லிக் கொள்ள அரைக் காணி நிலமாவது சொந்தமாக இருந்தது. இப்பொழுதோ அந்த அற்ப நிலத்தையும் அவர்களிடம் இருந்து பறித்துக் கொண்டு, பிறந்து வளர்ந்த பூமியில் இருந்து அப்புறப்படுத்தி, சொந்த நாட்டிலேயே பிழைப்பு தேடி நாடோடிக் கூட்டமாய்ச் சுற்றித் திரியும் அவலத்தினுள் தள்ளப்படுகிறார்கள். தாராளமய - தனியார்மய பொருளாதாரக் கொள்கைகளும், நவீன விவசாயமும் நமது நாட்டு விவசாயிகளுக்கு தந்திருக்கும் பரிசு இதுதான்.

• செல்வம்



படிப்பகம்

## நூற்பாலைகள் மூடலால் வேலையிழப்பு: கோவையைச் சூழ்ந்துள்ள அபாயம்

தென்னிந்தியாவின் "மான்செஸ்டர்" எனப் புகழப்படும் கோவை மாநகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள கணக்கற்ற நூற்பாலைகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன. செயற்கை நூலிழை இறக்குமதி பெருக்கம் காரணமாக, ஏற்கனவே நூல் விற்பனை மந்த நிலையை எட்டியுள்ளது. இந்நிலையில் கோவை நூற்பாலைகளின் முக்கிய சந்தையாக விளங்கிய தென் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட நாணய மதிப்பு வீழ்ச்சியின் காரணமாக வர்த்தகம் படுத்துப்போய், மீள முடியாத நெருக்கடியில் நூற்பாலைகள் சிக்கித் தவிக்கின்றன. அடுத்தடுத்து பல சிறிய நூற்பாலைகள் இப்போது மூடப்பட்டு வருகின்றன. சரக்குகள் விற்பனை ஆகாமல் தேங்கியிருப்பதால் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், பல பெரிய நூற்பாலைகள் விரைவில் மூடப்படும் அபாயத்தில் உள்ளன. இவற்றில் பணியாற்றி வந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வு இன்று கேள்விக் குறியாகிவிட்டது.

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி மற்றும் உடுமலை வட்டத்தின் சில பகுதிகள் தவிர, மற்றவை வறண்ட பகுதிகளாகும். கிராமப்புற வேலையின்மையால் நகரத்துக்குப் பிழைப்புதேடி வருவோருக்கு கோவையின் ஜவுளி - நூற்பாலைகளும் திருப்பூரின் உள்ளாடை ஆலைகளும் ஓரளவுக்கு வேலை வாய்ப்பளித்தன. ஆனால் தாராளமய - உலகமயமாக்கலின் விளைவாக திருப்பூரின் உள்ளாடை உற்பத்தியும் ஏற்றுமதியும் தீராத நெருக்கடியில் சிக்கி அங்கு வேலை வாய்ப்பு சுருங்கிப் போய் விட்டது. இப்போது கோவை நூற்பாலைகளும் நெருக்கடியில் சிக்கி மூடுவிழாவை எதிர்நோக்கியுள்ள நிலையில், வேலை வாய்ப்பு அரிதாகி வேலையின்மை தீவிரமாகி வருகிறது. கிராமப்புற வேலையின்மையோடு, நகர்ப்புற வேலையின்மையும் தீவிரமாகி கோவை மாவட்டம் சமூகக் கொந்தளிப்புக்கான அபாயத்தில் உள்ளதையே நிலைமைகள் உணர்த்துகின்றன.

## இந்துவெறி ஆட்சியின் யோக்கியதைக்கு இன்னுமொரு எடுப்பான சான்று

தாழ்த்தப்பட்ட - பழங்குடியின மக்கள் மீது இந்துவெறி ஆட்சியாளர்கள் காட்டும் கரிசனத்தின் லட்சணத்தை, மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள ரெய்டி கிராமக் குழந்தைகளின் போராட்டம் அம்பலப்படுத்திக் காட்டி விட்டது.

மகாராஷ்டிராவின் நாசிக் மாவட்டத்திலுள்ள ரெய்டி கிராமத்தில் பழங்குடியின குழந்தைகளுக்காக அரசு ஆரம்பப்பள்ளி ஒன்று உள்ளது. சாஷ்கிய ஆஸ்ரம சாலா எனப்படும் இப்பள்ளி, இந்தியாவிலுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் போலவே முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு ஊழலும் சுரண்டலும் புழுத்து நாறியது. இப்பள்ளியின் வகுப்பறைச் சுவர் இடிந்து ஓராண்டாகியும் இன்னமும் இடிபாடுகள் கூட அகற்றப்படவில்லை. கிணறு இருந்தும் குடிநீர் கிடைப்பதில்லை. மதிய உணவு சரியாக வழங்கப்படுவதில்லை. உணவில் காய்கறிகள் சேர்க்கப்படுவதில்லை. வாரம் ஒருமுறை முட்டை வழங்கப்பட வேண்டும் என விதியிருந்தும் குழந்தைகள் அவற்றைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை. அத்தனையும் தலைமையாசிரியரால் ஏப்பம் விடப்படும். கடந்த ஈராண்டாக இக்குழந்தைகளுக்குச் சீருடை கூட வழங்காமல் பள்ளி நிர்வாகிகள் சுருட்டிக் கொண்டனர். ஆசிரியர்களோ பள்ளிக்கே வருவதில்லை. பள்ளிக் காவலரோ மாணவர்களை மிருகத்தனமாக அடிப்பார். பள்ளியில் உணவுக் கூடம் இல்லாததால், பொட்டல் வெளியில்தான் உணவருந்த வேண்டும்.

தொடரும் இக்கொடுமையைக் கண்டு வெகுண்டெழுந்த மாணவர்களில் 23 பேர் (13 சிறுவர்கள், 10 சிறுமிகள்) இக்கிராமத்திலிருந்து ஏறத்தாழ 70 கி.மீ. தொலைவிலுள்ள, நாசிக் மாவட்ட ஆதிவாசிகள் நல ஆணையாளரிடம் புகார் மனு கொடுக்க பிப்ரவரி 13-ம் தேதியன்று நடைபயணமாகப் புறப்பட்டனர். செருப்பில்லாமல் வெறும் காலுடனும், தெரிந்தவர் மூலம் "வேன்" ஒன்றிலும் சென்று 16-ந் தேதி நண்பகலில் நாசிக் நகரையடைந்து ஆணையாளரிடம் அவர்கள் முறையிட்டனர். அதன் பின்னரே பழங்குடியின பள்ளியின் அவலமும், ஊழலும் வெளியுலகுக்குத் தெரிய வந்து பத்திரிகைகளில் நாறியது.

அரண்டு போன ஆட்சியாளர்கள், உடனடியாக பள்ளித் தலைமையாசிரியர், காவலரை மாற்றிவிட்டு அப்பொறுப்புகளில் புதிய நபர்களை நியமித்தும், முறையாக உணவு, குடிநீர், சீருடைகளை வழங்கியும் விவகாரம் பெரிதாகி விடாமல் செய்துள்ளனர். ஆனால் மாநிலத்திலுள்ள 734 பழங்குடியின பள்ளிகளில் 410 மட்டுமே இயங்குகின்றன என்றும்; இப்பள்ளிகளும் ரெய்டி கிராமப் பள்ளியைப் போலவே உள்ளன என்றும் பத்திரிகைகள் அம்பலப்படுத்தி வருகின்றன. தாழ்த்தப்பட்ட - பழங்குடி இன மக்களின் நலன்களைக் காக்கப் பாடுபவதாகப் பாசாங்கு செய்யும் இந்து வெறி ஆட்சியாளர்களின் யோக்கியதைக்கு ரெய்டி கிராமப் பள்ளிக் குழந்தைகள் நடத்திய போராட்டமே சான்று கூறப் போதுமானது.



**இந்துவெறி ஆட்சியின் யோக்கியதையை அம்பலப்படுத்தி நீண்ட பயணம் மேற்கொண்ட பள்ளிக் குழந்தைகள்**

## காதலுக்குத் தண்டனை: இஸ்லாமிய பழமைவாதிகளின் வெறியாட்டம்

இஸ்லாமிய இனக் குழுக்களின் பழமைவாத அகமணமுறை கட்டுப்பாடுகளை மீறி காதலித்த குற்றத்திற்காக, பாகிஸ்தானின் பக்டூன் இனவெறியர்கள் நடத்திய வன்முறை வெறியாட்டத்தால் கராச்சி நகரமே பயபீதியில் உறைந்து போயுள்ளது.

கராச்சியில் பக்டூன் இனத்தைச் சேர்ந்த 18 வயதான ரிஃப்பத் அப்ரிடி என்ற இளம்பெண், குன்வர் ஆசன் என்ற மொகாஜிர் இன இளைஞரைக் காதலித்து வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டார். இப்படி மாற்று இனத்தவரைத் [illegible]த்து திருமணம் செய்தது, தமது இனத்திற்கே நேர்ந்த அவமானம் என்று பக்டூன்கள், மொகாஜிர் இனத்தவர் மீது தாக்குதல் நடத்திக் கலவரத்தில் இறங்கினர். கராச்சியில் பல கடைகள் சூறையாடப்பட்டு இருவர் வெட்டிக் கொல்லப்பட்டனர். தடுக்க வந்த போலீசார் மீதும் பக்டூன்கள் தாக்குதல் நடத்தினர். தெருவில் சென்ற வாகனங்களை நிறுத்தி உள்ளே இருப்பவர்களோடு சேர்த்து தீயிட்டுக் கொளுத்தியதில் இரு மருத்துவர்கள் தீக்காயங்களுடன் தப்பினர். பலர் படுகாயமடைந்தனர்.

கராச்சியின் வடக்கு நசிமாபாத்தைச் சேர்ந்த இளம் பெண் ரிஃப்பத் கடந்த பிப்ரவரி மத்தியில் காணவில்லை என்று அறிந்ததும், குன்வர் ஆசன் கடத்திச் சென்றதாக போலீசாரிடம் புகார் செய்த பக்டூன்கள், அந்த இளம் பெண்ணுக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டது என்று ஒரு பொய் சாட்சியை தயாரித்தும், தமது இன பஞ்சாயத்தின்படி இவ்விளம் காதலர்களுக்கு மரண தண்டனை அறிவித்தும் பாக். அரசை எச்சரித்தனர். பின்னர் போலீசார் காதலர்களைக் கண்டு பிடித்து விசாரணைக்காக கடந்த மார்ச் 4-ந் தேதியன்று வழக்கு மன்றத்



படிப்பகம்

www.padippakam.com



துக்குக் கொண்டு வந்த போது, குன்வர் ஆசன் மீது பக்டூன் குண்டர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். மார்பிலும் கால்களிலும் குண்டு பாய்ந்து படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்கு பிறகு உயிர் பிழைத்துள்ளார். நீதிமன்றக் காவலில் இருந்த ரிஃப்பத், விசாரணைக்குப் பிறகு விடுதலையாகி குன்வர் ஆசனுடன் சென்று விட்டார். இளங்காதலர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. பக்டூன் குண்டர்களோ இவர்களைக் கண்டுபிடித்து கொன்றொழிக்க வெறியோடு அலைகின்றனர்.

அண்டை நாடான ஆப்கானில் இஸ்லாமிய அடிப்படைவாத - யுத்தவெறி இனக் குழுக்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதைத் தொடர்ந்து, பாகிஸ்தானிலுள்ள இனக்குழுக்கள் இஸ்லாமிய பழமைவாத காட்டுமிராண்டித்தனத்தை மீண்டும் உயிர்ப்பிக்க கிளம்பியுள்ளன. அதன் வெளிப்பாடாகவே கராச்சி கலவரம் நடந்துள்ளது. தமது குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காக இனக்குழுக்களின் பழமைவாதத்துடன் சமரசம் செய்து கொள்ளும் ஆட்சியாளர்கள், பாகிஸ்தானின் 50 ஆண்டுகால அரசியல் சட்டத்தையே கேலிக் கூத்தாக்கி விட்டனர் என்று அந்நாட்டின் மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துப் போராடி வருகின்றன.

## தாழ்த்தப்பட்ட கிறித்துவர்கள் மீது தாக்குதல் இந்துவெறி ரவுடிகளின் கொட்டம்

மதவெறி வன்முறைக் கலவரங்கள் மூலம் காலூன்றுவதுதான் இந்து வெறி பாசிசப் பரிவாரங்களின் உத்தி என்பதை குஜராத்தில் அண்மையில் நடந்த வன்முறை வெறியாட்டங்களே நிரூபித்துக் காட்டுகின்றன. குஜராத்திலுள்ள பரோடாவின் ராஜ் மஹால் சாலையிலுள்ள போலோ விளையாட்டு மைதானத்தில் ஏசு விழாவை நான்கு நாட்களுக்கு நடத்த உள்ளூர் கிறித்துவ சபைகள் ஏற்பாடு செய்திருந்தன. மார்ச் 4-ந் தேதியன்று ஆரம்ப பூசைகளை பாதிரியார்கள் நடத்தி முடித்தவுடன், நூற்றுக்கும் மேற்பட்ட விசுவ இந்து பரிஷத் அமைப்பின் குண்டர்கள் அரங்கினுள் ஆயுதங்களுடன் நுழைந்து, அங்கு திரண்டிருந்த 15,000-க்கும் மேற்பட்ட மக்களை மிருகத்தனமாகத் தாக்கினர். "ஜெய் சிறீராம்" என்று கூச்சலிட்டுக் கொண்டே இந்த கும்பல் விழா மேடையை அடித்து நொறுக்கி, மைதானத்திலிருந்த வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தியது. கலைந்தோடிய மக்களை விரட்டிச் சென்று காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கியது. நான்கு நாட்கள் நடைபெறுவதாக இருந்த இந்த விழா, நான்கு மணி நேரத்திற்குள் கலைந்து விட்டது. இந்த வெற்றியை இந்து வெறியர்கள் லாரிகளில் நகரெங்கும் கோஷமிட்டபடியே வலம் வந்து கொண்டாடினர்.




இன்னுமொரு போஸ்னியா: செர்பிய இனவெறி அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் கொசாவோ மக்கள்

"கிறித்துவ பாதிரியார்கள் தெய்வீக சுகமளிக்கும் விழா என்ற பெயரில் மக்களை ஏமாற்றுகிறார்கள். ஊமைகள் பேசுவதாக, செவிடர்கள் கேட்பதாக கடவுளின் பெயரால் மோசடி செய்து மதமாற்றம் செய்கிறார்கள். இதை முறியடிக்கவே இத்தகைய ஏமாற்றுவித்தைகளை எதிர்த்தோம்" என்று தமது ரௌடித்தனத்திற்கு இந்து வெறியர்கள் நியாயம் கற்பிக்கின்றனர். இத்தாக்குதலையொட்டி கைது செய்யப்பட்ட 15 இந்து வெறிக் குண்டர்களும் உடனே விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு வந்த பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களாவர். குஜராத்தின் வடக்கே அம்பாஜியிலிருந்து தெற்கே ஆவாதாங் வரை அவர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில், கிறித்துவ தன்னார்வக் குழுக்களும் தொண்டு நிறுவனங்களும் காலூன்றி, கணிசமானோரை கிறித்துவ மதத்திற்கு மாற்றியுள்ளன.

இந்து மதத்தில் நிலவும் மேல்சாதி ஆதிக்கம் - ஒடுக்குமுறையின் காரணமாகவே தாழ்த்தப்பட்ட - பழங்குடியின மக்கள் மதம் மாறியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்துள்ள இந்து வெறியர்கள், மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தி அச்சுறுத்துவது, நிரந்தர பயபீதியில் ஆழ்த்தி நிர்பந்தமாக தம்பக்கம் இழுத்துக் கொள்வது என்ற நோக்கத்துடனேயே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதற்கு முன்னும் பல சிறிய தாக்குதல்களும் கைகலப்புகளும் நடந்துள்ளதாக செய்திகள் வருகின்றன. இந்து வெறியர்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமே எதிரிகளல்ல; அனைத்து சிறுபான்மை மதத்தவருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எதிரிகள்தான் என்பதை இது மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

## இனவெறியில் செர்பியர்கள் உரிமைப் போரில் அல்பேனியர்கள்

யூகோஸ்லாவியாவின் தென்மேற்கே உள்ள சிறிய மாநிலமான கொசாவோவில் தொடரும் இனவெறி அடக்குமுறை படுகொலைகள், அம்மாநிலத்தையே இன்னுமொரு போஸ்னியாவாக மாற்றியுள்ளது.

யூகோஸ்லாவியாவின் பெரும்பான்மை இனத்தவரான செர்பியர்கள், கொசாவோவை தமது நாகரிகத்தின் தொட்டிலாகக் கருதுகின்றனர். 14-ஆம் நூற்றாண்டில் துருக்கியர்களுக்கு எதிராகப் போரிட்டு செர்பிய தேசிய வாதம் உருவாகக் காரணமாக இருந்ததும், செர்பிய சுதந்திரப் போராட்டத்தின் தாய் மண்ணாக இருந்ததும் கொசாவோ பிராந்தியமாகும். இன்று இப்பகுதியில் சிறுபான்மை இனத்தவரான அல்பேனியர்களே அதிகமாக உள்ளனர். மொத்த மக்கட் தொகையில் 90% பேராக உள்ள அல்பேனியர்கள் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, 1975-இல் சுயாட்சி உரிமையைப் பெற்றனர். பின்னர் '80-களின் இறுதியில் தனி மாநில உரிமை கோரி அல்பேனியர்களால் நடத்தப்பட்ட போராட்டங்கள் செர்பிய இராணுவத்தால் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டன.

1989-இல் மிலோசெவிக் யூகோஸ்லாவியாவின் அதிபரானதும் தனது முதல் வேலையாக கொசாவோவின் சுயாட்சி உரிமையைப் பறித்து, செர்பியாவுடன் இணைத்து அதன் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்தார். இதே போல சிறுபான்மை ஹங்கேரியர்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட்ட வைவ்வோடினா பிராந்தியமும் செர்பியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இக்கொடுஞ் செயலை எதிர்த்து அல்பேனியர்கள் போராட்டங்களில் இறங்கியபோது மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டனர். குறிப்பாக, துருக்கியர்களுக்கு எதிராக நடந்த செர்பிய போர் வெற்றியின் 600-ஆவது ஆண்டு விழாவை கொசாவோவில் நடத்தி, செர்பிய இனவெறியை மிலோசெவிக் கிளறிவிட்டதும், கொசாவோவில் அடக்குமுறையும் இனவெறிப் படுகொலைகளும் தீவிரமடையத் தொடங்கியது. அல்பேனியர்களை நர வேட்டையாடுவதற்கென்றே சிறப்புப் போலீசுப் படை அங்கு குவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதத்தில் சுயாட்சி உரிமை கோரியும், சிறப்புப் போலீசுப் படையை விலக்கக் கோரியும் அல்பேனியர்கள் போராடிய போது டிரானியா பகுதியில் 80 பேர் செர்பிய இனவெறி போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொசாவோ தலைநகர் பிரிஸ்டினாவில் 20



படிப்பகம்

www.padippakam.com



பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர். போலீசாரும் செர்பிய இனவெறியர்களும் நடத்தும் கொலைவெறித் தாக்குதலுக்கு அஞ்சி பலர் காடுகளில் ஒளிந்து வாழ்கின்றனர். ''600 ஆண்டுகளுக்கு முன்பு செர்பியர்களின் போர் கொசாவோவில் தொடங்கியது; இன்று அது கொசாவோவிலேயே முடிவுக்கு வரும்'' என்று மிலோசெவிக் இனிவெறியோடு கொக்கரிக்கிறார்.

ஆறாண்டுகளுக்கு முன்பு யூகோஸ்லாவியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற சின்னஞ்சிறுநாடான போஸ்னியாவைக் கைப்பற்ற செர்பிய இனவெறியும் அடக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்பட்டு, பின்னர் ஏகாதிபத்திய வல்லரசுகள் தலையிட்டு மேலாதிக்கம் செலுத்தியதைப் போலவே, இப்போது கொசாவோ விவகாரம் மாறியுள்ளது. கொசாவோ விவகாரத்தில் மூக்கை நுழைத்துள்ள அமெரிக்காவும் பிரிட்டனும் சிறப்பு போலீசுப் படையை வெளியேற்றி பேச்சுவார்த்தை நடத்தாவிட்டால் யூகோஸ்லாவியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப் போவதாக மிரட்டுகின்றன. பிரான்சும், ரஷ்யாவும் பொருளாதாரத் தடை விதிப்பை எதிர்க்கின்றன. ஒருபுறம் செர்பிய இனவெறி, மறுபுறம் வல்லரசுகளின் மேலாதிக்கம் எனும் இரட்டை நுகத்தடியிலிருந்து மீளவழிதெரியாமல், கொசாவோ குருதிச் சேற்றில் மூழ்கி வருகிறது.

## 'மார்க்சிஸ்டு' முதல்வரின் மோசடி முகம்

கேரளாவில் மலையாள மொழியில் அண்மையில் வெளிவந்துள்ள ஒரு வரலாற்று ஆய்வு நூல், போலி கம்யூனிஸ்டு முதல்வர் நாயனாரின் மோசடி முகத்திரையைக் கிழித்தெறிந்துள்ளது. கேரள 'மார்க்சிஸ்ட்' முதல்வரான நாயனார், தான் கையூர் எழுச்சியில் பங்கேற்ற போராளி என்று நீண்ட காலமாக கூசாமல் புளுகி வந்தார். 1941-இல் அன்றைய பிரிட்டிஷ் காலனியாட்சிக்கு எதிராக கையூரில் நடந்த கம்யூனிஸ்டுகளின் எழுச்சியில் தானும் பங்கேற்றதாகவும், பின்னர் போலீசாரின் பிடியிலிருந்து தப்பியோடி தலைமறைவானதாகவும் நாயனார் சரடு விட்டுக் கொண்டிருந்தார். 'மார்க்சிஸ்ட்' கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு, தனிக்கட்சி நடத்தி வரும் எம்.ஜி. ராகவன், சில ஆதாரங்களுடன் நாயனாரின் அண்டப் புளுகை ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளார்.

இப்போது ஆதாரப் பூர்வமாக, வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில் இரு வரலாற்றாசிரியர்கள் நாயனாரின் புளுகை அம்பலப்படுத்தி ஒரு புத்தகமே வெளியிட்டுள்ளனர். ''நாயனார்: கையூரிண்டே கபட முகம்'' (நாயனார்: கையூரின் மோசடி முகம்) எனும் தலைப்பில் 225 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் நாயனாரின் பெயர் கையூர் எழுச்சி பற்றிய எந்த வரலாற்று ஆவணத்திலோ, போலீசு குறிப்பேட்டிலோ இல்லை என்பதையும், மங்களூரின் கனரா செசன்சு நீதிமன்றக் குறிப்புகளிலிருந்து ஆதாரப் பூர்வமாகவும், கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்று ஆவணங்களிலிருந்து ஆதாரங்களை மேற்கோள் காட்டியும் நாயனாரின் மோசடியைத் திரைகிழித்துள்ளனர்.

சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற சகாக்களையே வெள்ளை அதிகாரிகளிடம் காட்டிக் கொடுத்த பிரதமர் வாஜ்பாய், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதாகப் புளுகியதைப் போல, கேரள போலி கம்யூனிஸ்டு முதல்வர் நாயனாரும் தானும் கையூர் எழுச்சியில் பங்கேற்றதாகப் புளுகி மூக்குடைந்து போயுள்ளார். தனது மோசடி அம்பலப்பட்ட ஆத்திரத்தில் ''இந்தப் புத்தகத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று எனக்குத் தெரியும்'' என்று ஈனக்குரலில் எகிறிக் குதிக்கிறார். போராட்டப் பாரம்பரியத்திலிருந்து வந்தவர்களாக நாடகமாடி ஏய்த்த வாஜ்பாய்க்கும் நாயனாருக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதை மானமுள்ள 'மார்க்சிஸ்டுகள்' தான் விளக்க வேண்டும்.

## தென்னமெரிக்காவை உலுக்கும் சர்வாதிகார எதிர்ப்புப் புயல்

தென்னமெரிக்க நாடான சிலியில் சர்வாதிகார எதிர்ப்புப் புயல் சுழன்று வீசத் தொடங்கியுள்ளது. மிகக் கொடிய இராணுவ சர்வாதிகாரியும் சிலியின் 25 ஆண்டுகலை அதிபருமான அகஸ்டோ பினோசெட்டுக்கு எதிராக நாடெங்கும் மக்களது போராட்டங்கள் பற்றிப் படர்ந்து வருகின்றன.

1973-இல் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் ஆதரவுடன் சட்டவாத சோசலிசவாதி அலெண்டேவைக் கொன்று, கம்யூனிஸ்டுகளையும் ஜனநாயகவாதிகளையும் நரவேட்டையாடி, நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து, எதிர்ப்புரட்சி குடைக் கவிழ்ப்பின் மூலம் ஆட்சிக்கு வந்தவன்தான் இராணுவ சர்வாதிகாரி பினோசெட். பதவிக்கு வந்த பத்தாண்டுகளுக்குள் அரசியல் காரணங்களுக்காக 3200 பேரைக் கொன்றொழித்தான். போலீசரால் பிடித்துச் செல்லப்பட்ட ஆயிரக் கணக்கானோர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டனர். பல நூறு பேர் நாடு கடத்தப்பட்டனர்.

அவனது கொடிய சர்வாதிகாரி ஆட்சிக்கு எதிராகத் தொடர்ந்து நடந்த மக்கள் போராட்டங்களால் 1990-இல் அவன் ஒரு போலி ஜனநாயக அரசாங்கத்தை நிறுவி நாடகமாடினான். ஆனாலும் உண்மையான அதிகாரம் பினோசெட்டிடமே இருந்தது. அவனது இராணுவக் கும்பலே அமைச்சர்களாக நீடித்தனர்.




போலீசாரல் கைது செய்யப்பட்டு 'காணாமல் போனோரின்' உறவினர்கள் பினோசெட்டின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக நடத்தும் ஆர்ப்பாட்டம். (உள்ளே: இராணுவ சர்வாதிகாரி பினோசெட்)

பினோசெட்டின் ஜனநாயக மாய்மாலங்களை சிலி நாட்டு மக்கள் ஏற்கத் தயாராக இல்லை. மக்களது போராட்டம் - அதிருப்தியின் காரணமாக, இப்போது இந்த சர்வாதிகாரி இராணுவத் தலைமைத் தளபதி பொறுப்பை தனது விசுவாசியிடம் ஒப்படைத்துவிட்டு, ஆயுள் முழுவதும் நாடாளுமன்ற மேலவை (செனட்) உறுப்பினராக நீடிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைத்துக் கொண்டுள்ளான். இதன் மூலம் அவன் நிரந்தரமாக அதிகாரத்தை ஏந்திச் சுழற்ற சட்டபூர்வ அங்கீகாரத்தைப் பெற்றுள்ளான். செனட் உறுப்பினர்கள் மீதான புகார்களை விசாரிக்க நீதிமன்றத்துக்கு உரிமை கிடையாது என்பதால், அவன் மீதான கொலை வழக்கு - விசாரணைகளிலிருந்து தப்பிக்கவே இவ்வாறு செய்துள்ளான்.

82 வயதாகும் இக்கிழட்டுச் சர்வாதிகாரி கடந்த மார்ச் முதல் வாரத்தில் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பதவியேற்கும் விழாவின் போது, தலைநகர் சாண்டியாகோவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். போலீசு, இராணுவத்தை ஏவி கடுமையாக ஒடுக்கிய போதிலும் மக்களது போராட்டங்கள் காட்டுத் தீயாக நாடெங்கும் பற்றிப் படர்ந்து வருகிறது. சிலி நாட்டில் எதிர்க் கட்சியாக உள்ள போலி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவியான கிளாடிஸ்மாரினை, பினோசெட் கும்பல் கைது செய்து சிறையில் அடைத்ததைத் தொடர்ந்து, சிலி மக்களின் சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டம் மேலும் தீவிரமடைந்து தென்னமெரிக்க கண்டத்தையே உலுக்கிக் கொண்டிருக்கிறது.


படிப்பகம்

# பார்ப்பன தினமலரின் வெடிகுண்டு அரசியல்

கடந்த மார்ச் 7-ஆம் தேதி ''தினமலர்'' நாளேட்டில் பரபரப்பான ஒரு குண்டு வெடிப்புச் செய்தி வெளி வந்தது. 'சென்னையில் இருந்து சென்ற ரயிலில் இருந்து 'பாக்ஸ் குண்டு' வீச்சு - தஞ்சை அருகே அதிகாலையில் பயங்கரம்' எனப் பெரிய எழுத்துக்களில் கால் பக்கத்திற்கும் மேலாக எழுதி பீதியூட்டியது. 'சோதனையிட்ட ரயிலில் குண்டு வந்தது எப்படி?' எனத் துணைத் தலைப்பிட்டு கட்டம் கட்டி ஒரு செய்தியும் வந்தது. 'போலீசார் அதிர்ச்சியுடன் குழம்பிப் போய் உள்ளனர்' என அச்செய்தி கூறுகிறது.

ஆனால் இச்செய்தி வெறும் வதந்தியே. அப்பட்டமான பொய்ச் செய்தி. அதே செய்தியின் இறுதியில், உயர் போலீசு அதிகாரி 'ஓடும் ரயிலில் இருந்து பார்சல் குண்டு வீசப்பட்டது என்ற செய்தி ஆதாரமற்றது' என மறுத்துள்ளார். அப்படி இருந்தும் தனது பொய்யை உண்மை எனச் சாதிக்க 'போலீசார் குழம்பிப் போயுள்ளனர்,' எனக் கட்டம் கட்டி எழுதுகிறது.

அன்று மட்டுமல்ல. தஞ்சை அருகே சாலியமங்கலத்தில் அரிசி ஆலையில், பிப்ரவரி 8-ஆம் தேதி இரவு குண்டு வெடித்ததிலிருந்து இன்று வரையும் தொடர்ந்து, நடந்த சம்பவங்களுடன் கூடுதலாக பொய்களை, வதந்திகளை, கற்பனைகளைச் சேர்த்து செய்தியாக்கிப் பீதியூட்டி வருகிறது தினமலர்.

• பிப்ரவரி 9-ஆம் தேதி தினமலரில் 'தஞ்சை குண்டு வெடிப்பு, வாஜ்பாயைக் கொல்ல பயங்கர சதி' எனப் பரபரப்பாக வதந்தியை எழுதி காசாக்கியது. அதில் செய்தியை விட கற்பனைகளே அதிகம். '...தற்போது பலியாகியுள்ள நான்கு பேரும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யில் பயிற்சி பெற்றவர்கள் என்று முதற் கட்ட தகவல்கள் கூறுகின்றன. ஆனால் போலீஸ் தரப்பில் இதற்குப் பதிலில்லை' என எழுதுகிறது.

அதே செய்தியில் வாஜ்பாயைக் கொல்ல சதித் திட்டம் என்ற உள்தலைப்பிட்டு அதன் கீழே, '...கடந்த 4-ஆம் தேதி தேர்தலைப் புறக்கணிப்பது என்றும், பா. ஜனதா தலைவர் வாஜ்பாயைக் குண்டு வைத்து தீர்த்துக் கட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் திடுக்கிடும் தகவல்கள் போலீசுக்குக் கிடைத்துள்ளது' என எழுதுகிறது. அடுத்த பத்தியில் திட்ட விவரத்தை விவரித்து, வாஜ்பாய் பயணத்தை ரத்து செய்து விட்டார், அத்வானி மட்டும் வருகிறார் என விவரிக்கிறது.

அதன் கீழ் 'தீவிரவாத அமைப்பு' என்ற உள்தலைப்பிட்டு, 'முஸ்லிம் தீவிரவாத அமைப்புதான் குண்டுகளைத் தயாரித்துள்ளனர் என போலீசார் கூறினாலும் வாஜ்பாயைக் கொலை செய்யும் நோக்கம் பற்றி எந்தக் கருத்தையும் போலீசார் தெரிவிக்கவில்லை' என்று மூன்றாவது பத்தியிலேயே முரண்படுகிறது. முதலில் போலீசுக்கு கிடைத்த திடுக்கிடும் தகவல்கள் என்பது தினமலரின் கற்பனைக் கட்டுக்கதை என்பது அம்பலமாகிவிடுகிறது.

• 9.2.'98 நாளிதழில், திருச்சியில் இரகசியக் கூட்டம் நடத்திய தீவிரவாத அமைப்புதான் குண்டு வெடிப்புக்குக் காரணம் என கிசுகிசு எழுதிய அதே தினமலர் தனது 12.2.'98 நாளிதழில் 'இதில் ஈடுபட்ட அமைப்பு பற்றி விசாரணை முடிவில்தான் விவரம் தெரியும்' என தனது பொய்ச் செய்தியை மேலும் அம்பலப்படுத்துகிறது. தனது நாளிதழிலேயே தனது கற்பனைகளே அம்பலமாவது பற்றி துளியும் கவலைப்படுவதில்லை. தனது வதந்திகள் பரபரப்பாக முதலில் வியாபாரமாகி விடுகிறதே! முஸ்லிம்கள் மீது பரப்பிய அவதூறு தானே மனதில் பதியும். அது போதும் பார்ப்பன தினமலருக்கு.

• 14-ஆம் தேதி கோவையில் நடந்த தொடர் குண்டு வெடிப்பைப் பற்றி 15-ஆம் தேதி செய்தி வெளியிட்ட தினமலரில் வேறு எந்த பத்திரிகையிலும் வராத ஒரு செய்தி வந்துள்ளது. 'பின்னர், அவர் (அத்வானி) விமான நிலையம் திரும்பி, திருச்சி சென்றார். நிருபர்களிடம் அவர் கூறுகையில், ''தி.மு.க., சதிதான் குண்டு வெடிப்புகளுக்கு காரணம்,'' என்றார்.'

அதன்பின் சென்னையில் அத்வானி கொடுத்த பேட்டியை தினமலரும் வெளியிட்டது. அதில் தி.மு.க. சதி என ஏதுமில்லை.

கோவை தொடர் குண்டு வெடிப்புக்குப் பின்னர் தினமலரில் வந்த செய்திகள் அனைத்துமே இந்த வகைகள்தான். ஏறக்குறைய நான்கைந்து நாட்களுக்கு தினமலரின் எல்லாப் பக்கங்களிலும் குண்டு வெடிப்புச் செய்திகள்தான். அதில் பாதிச் செய்திகள் கட்டுக்கதைகள்.

• 16-ஆம் தேதி செய்திகளில் 6 மனித வெடிகுண்டுகள் பற்றி வாஜ்பாய் கூறியதாக முதன்மையாக செய்திகளை வெளியிட்டது. அரசும், போலீசும் மறுத்தும் கூட 'உளவுத் துறை போலீசாருக்கு தகவல் கிடைத்து இருப்பதாகக் கூறப்படுகிறது' என செய்தி வெளியிட்டது. அடுத்தடுத்த நாட்களில் அப்பட்டமாகவே பொய்களை செய்தியாக்கியது. 'மாடியில் இருந்து குண்டு வீசினார்கள்' என பா.ஜ.க.வைச் சேர்ந்த 13, 14, 15 வயது சிறுவர்கள் கூறிய செய்தியை முதன்மையாக்கி, பெரிய கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டு பீதியூட்டியது.

• 20-ஆம் தேதி தினமலரில் 'கராச்சி



www.padippakam.com




''காஷ்மீரில் பிடிபட்ட இச்சுவரொட்டி, முஸ்லீம் இளைஞர்களைத் தீவிரவாதத்துக்கு அழைக்கிறது'' என உருது வாசகங்களை வேண்டுமென்றே தவறாக மொழி பெயர்த்து அவதூறு பரப்பியது தினமலர்

யில் இருந்து கள்ளத் தோணியில் குண்டுகள் ஊடுருவல்' என் முதல் பக்கம் செய்தி வந்தது. செய்தி பீதியூட்டும் வதந்தியுடன் முடிகிறது. ''குண்டுகள் பற்றி விவரம் அறிவித்துள்ள போலீசார் சில இடங்களில் பிடித்துள்ள குண்டுகள் பற்றிய விவரத்தை தெரிவிக்கவில்லை, ஆர்.டி.எக்ஸ். குண்டுகள் பற்றி மூச்சு விடவே இல்லை.'' அதாவது, போலீசு பார்ப்பன தினமலரின் கட்டுக் கதைகளை அங்கீகரிக்க வேண்டும். அப்படி அங்கீகரிக்காத போது போலீசின் கைகள் கட்டப்பட்டுள்ளன; அரசியல் தலையீட்டால் போலீசு திறமையாக செயல்பட இயலவில்லை என ஆட்சியைக் கலைக்கக் கோருவது. ராஜீவ் கொலையின் போது இவ்வகையில் மிகத் திறம்பட வதந்திகளை எழுதி எதிர்த்தரப்பை முடக்கியது போலவே இம்முறையும் பாதி உண்மைகளை எழுதி, பின் வதந்திகளை, பீதிகளை வரையறையின்றிக் கிளப்பி வருகிறது.

பாகிஸ்தானின் கராச்சியிலிருந்து ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து கடத்தியதை நேரில் பார்த்தது போலவும், கோவையில் ஆர்.டி.எக்ஸ்., வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும், மேலிட உத்தரவால் போலீசு உண்மைகளை மூடிமறைப்பதாகவும் வதந்திகளை உலவ விட்டது தினமலர். கராச்சியிலிருந்து கடலில் கள்ளத் தோணி வருவதாக வரைபடம் வேறு வெளியிட்டது.

ஆனால் அதே தினமலரில் தேர்தலுக்குப் பின்னர், தமிழகம் முழுதும் கைப்பற்றப்பட்ட வெடிகுண்டுகள் பெரும்பாலும் இங்கேயே பல பகுதிகளிலிருந்து கொண்டு வந்து தயாரிக்கப்பட்டவை என செய்தி வெளியிட்டது. முன்னர்தான் பரப்பிய அவதூறு பற்றி ஒரு வரி கூட மறுப்பு எழுதவில்லை.

• இதற்கு இன்னுமொரு சான்று 22.2.'98 தினமலரில் உள்ளது. 'தீவிரவாதத்தை ஊக்குவிக்க இளைஞர்களுக்கு ஒரு லட்சம்' என கொட்டை எழுத்தில் தலைப்பிட்டு ஏறக்குறைய கால் பக்கம் செய்தி எழுதியது. அதில் உருது சுவரொட்டி ஒன்றையும் அச்சிட்டுள்ளது.

''சமீபத்தில் ஜம்மு - காஷ்மீரில் ஒரு போஸ்டர் பிடிபட்டது. ஐ.எஸ்.ஐ. எந்த அளவுக்கு தங்கள் செல்வாக்கை இந்தியாவில் நிலை நிறுத்தியுள்ளனர் என்பதற்கு, இந்த போஸ்டரே சாட்சி. இந்த போஸ்டரில், குண்டு வைப்பது எப்படி, அதை இயக்குவது எப்படி, நவீன தொழில்நுட்ப யுக்திகளை பரப்புவது எப்படி என்பது குறித்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.''

''காஷ்மீரிலோ அல்லது பாகிஸ்தானிலோ இளைஞர்களுக்கு பயிற்சி தரப்படும்; தீவிரவாதப் பயற்சி பெறும் இளைஞர்களுக்கு தலா ரூ. 1 லட்சம்; அது தவிர மாதம் ஒன்றுக்கு ரூ. 6000 பயிற்சித் தொகையாக தரப்படும் என்றும் போஸ்டர் கூறுகிறது!''

இன்னும் இதுபோல் பலவும் எழுதியது. 28.2.'98 தினமலரின் வாசகர் கடிதப் பகுதியில் உருது தெரிந்த முஸ்லிம் ஒருவர் தினமலர் பொய்யாக எழுதியதை அம்பலப்படுத்துகிறார். அந்த உருது வாசகங்கள், 'வன்முறை இஸ்லாமிய மதக் கோட்பாட்டுக்கு எதிரானது. வன்முறை கூடாது. பாகிஸ்தானின் கைக்கூலி ஆவது தவறு' என்று உள்ளதாகக் கூறுகிறார். அக்கடிதத்தை வெளியிட்ட தினமலர் தனது பொய்ச் செய்தி பற்றி மவுனம் சாதிக்கிறது. கதை அளப்பதற்கு எந்த வரையறையும் இல்லை.

• 18.2.'98 தினமலரில் 'சதிகாரர்களின் அடுத்த குறி, போலீசு குடியிருப்புகள்' என வதந்தியைப் பரப்பி போலீசுக்கு பீதியூட்டுகிறது. இதற்கு ஆதாரமாக எந்தத் தகவலும் தரவில்லை.




• 'சென்னை புறநகரில் அதிரடி சோதனை; 28 சாக்கு மூட்டைகளில் இருந்தது என்ன? போலீசார் மவுனம்' என்ற தலைப்பில் சுமார் கால் பக்க செய்தி வெளியிட்டுள்ளது. அது முழுக்க வதந்தியாக மட்டுமே உள்ளது. 28 சாக்கு மூட்டைகளில் இருந்தது என்ன என்று தெரியாமலே 'அது சென்னையைத் தகர்க்க நடக்கும் சதியின் ஒரு பகுதி' எனப் பீதியூட்டுகிறது. 'பயங்கர வெடி பொருட்களாக இருக்கும் என்று கூறப்படுகிறது' என்ற வதந்திதான் இந்தப் பீதியூட்டலுக்குப் பின்னணி!

• 23.2.'98-இல் 'வாணியம்பாடி சந்தேக நடமாட்டம்: மர்மம் விலகுமா' என்ற தலைப்பிட்டு ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. அப் பகுதி மலைகளில் முன்பு வெடிச் சத்தம் கேட்டது. பின் பூமியில் பிளவு ஏற்பட்டு, எரிமலைக் குழம்பு போல திரவம் கசிந்தது. இது பழைய செய்தி. இப்போது முஸ்லிம்கள் மலையில் குண்டு வெடித்து சோதனை நடத்தினால்தான் பூமி பிளந்தது என்கிறது தினமலர். 'பூமி பிளந்தது எப்படி என அதிகாரிகள் மவுனம் சாதிப்பது ஏன்?' என ஒட்டுமொத்தமாக போலீசும் அதிகாரிகளும் உண்மையை மறைக்கின்றனர் என குற்றம் சாட்டுகிறது.

பொதுவாக வெடிகுண்டு பீதியூட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசு எச்சரிக்கிறது. ஆனால் இப்படி தனது நாளிதழ்கள்

**கோவையில் முஸ்லீம் மதவெறியர்கள் தொடர் குண்டு வெடிப்பு நடத்தி அப்பாவி மக்களைக் கொன்றது உண்மை. ஆனால், முஸ்லீம் மதத் தீவிரவாதம் தான் நாட்டைச் சூழ்ந்துள்ள பேரபாயம் என்ற உண்மைக்குப் புறம்பான சித்திரத்தை மக்கள் – குறிப்பாக இந்துக்கள் மனதில் பதிய வைப்பதற்காகவே, உண்மைச் சம்பவங்களுடன் பொய்களையம், கற்பனைகளையும் கலந்து பீதியூட்டுகிறது, தினமலர்.**

www.padippakam.com

மூலமே எவ்வித ஆதாரமின்றித் தொடர்ந்து வதந்தியை வெளியிட்டு பீதியூட்டி வரும் பார்ப்பன தினமலரை என்ன செய்வது?

முழுப் பொய் என்றால் உடனே அம்பலப்பட்டுப் போகும் என்பதாலேயே உண்மை, பொய் என கலந்து எழுதுகிறது தினமலர். கோவையில் முஸ்லிம் மதவெறி கும்பல் தொடர் வெடிகுண்டு வெடிப்பை நடத்தி அப்பாவி மக்களைக் கொன்றது உண்மை. ஆனால் அதுபற்றி தொடர்ந்து பீதியூட்டும் வதந்திகளை பக்கம் பக்கமாக எழுதுவதன் நோக்கம் என்ன?

ஒரு பக்க சம்பவங்களை மட்டும் ஊதிப் பெருக்கி, பூதாகரமாக்கி இந்து மதவெறியை நியாயப்படுத்துகின்றன பார்ப்பன மதவெறி கும்பல்கள் தினமலர் ஏடு அதற்குத் தகுந்தாற் போல் பீதியூட்டும் கற்பனைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன.

உலகெங்கும் பாசிசக் கும்பல்கள் ஒரே மாதிரி செயல்படுகின்றன. 'ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் உண்மை என நம்ப வைப்பது' தான் அது. ஜெர்மனியின் இட்லர் மட்டுமல்ல. இங்கு பார்ப்பன மதவெறி பாசிச கும்பல்கள் இதையே செய்கின்றன.

**உண்மையிலேயே இந்து மதவெறி பாசிசமும், நாடு மறுகாலனியாக்கப்படுவதும் தான் நாட்டைக் கவ்வி வரும் பேரபாயம். தினமலர் நாளேடு தனது பார்ப்பனத் தன்மை காரணமாக இந்து மதவெறியர்கள் நடத்தி வரும் படுகொலைகள், அக்கும்பலின் பிற கிரிமினல் நடவடிக்கைகள் பற்றி வாய் திறப்பதில்லை.**

முஸலிம் வன்முறையாளர்களால் மட்டும்தான் பிரச்சினை என்கிற முறையில் நடந்த சம்பவங்களுடன் பொய்களையும் கற்பனைகளையும் கலந்து பீதியூட்டுகிறது தினமலர். அதே நேரத்தில் முஸ்லிம் மதவெறி உருவாவதற்கே அடிப்படையாயுள்ள இந்து மதவெறி அமைப்புகளைப் பற்றி இப்படி எழுதுவதில்லை.

தினமலர் நாளேடு பார்ப்பன சார்புடன் செயல்படுவதாலேயே, நாட்டிற்கே அபாயகரமாக உள்ள இந்து மதவெறி பாசிஸ்டுகளின் கோர முகத்தைப் பற்றி அடக்கி வாசிக்கின்றன.

பார்ப்பன மதவெறி நஞ்சைத் திணிக்கும் இவர்களின் எத்தணிப்புகளை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டியது ஜனநாயக உணர்வுடைய ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

• மாரி

# விவிமு-வுடன் முட்டி மூக்குடைந்த சாதி ஆதிக்க கும்பல்

திருச்சி அருகே இலங்குடி வட்டத்திலுள்ள பெருவளப்பூரில், விவசாயிகள் மத்தியில் விவசாயிகள் விடுதலை முன்னணி செல்வாக்குடன் உள்ளது. ஓட்டுப் பொறுக்கிகளின் மோசடிகளையும், ரௌடித் தனங்களையும் எதிர்த்து வருவதால், தி.மு.க. உட்பட எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் வி.வி.மு.வைப் பழிவாங்க சமயம் பார்த்துக் காத்திருந்தனர்.

மேலும் இந்த ஊரில் சாதி ஆதிக்கமும் கட்டப் பஞ்சாயத்தும் நிலவுகிறது. இவற்றை எதிர்த்தவர்கள் யாருமில்லை. இவர்களின் ஊர்ப் பஞ்சாயத்து என்ற கட்டப் பஞ்சாயத்தையும் வி.வி.மு. அம்பலப்படுத்துவதால் மேலும் ஆத்திரமுற்றனர்.

பொங்கலையொட்டி 19.1.'98 அன்று நடந்த கபடி விளையாட்டில் மோசடி செய்தனர். அதைச் சுட்டிக் காட்டிய தோழர் உதயகுமாரை போதையில் இருந்த சுதாகர், பாரதிராஜா என்ற ரவுடிகள் அடித்து விட்டனர். தடுக்க வந்த தோழர் மணியையும் அடித்தனர்.

அடித்தவர்கள் மன்னிப்பு கேட்கவில்லை என்றால் ஆட்டம் தொடரக் கூடாது என தோழர்களும் ஆதரவாளர்களும் கூறவே, பிரச்சினையானது. ரவுடிக் கும்பலும் அவர்களுடன் ஆதிக்கவாதிகளும் சேர்ந்து தோழர்களை மிரட்டினர். அப்போது நடந்த கைகலப்பில் ஒரு டியூப்லைட் உடைந்தது.

அன்று இரவு 1 மணிக்கே ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ் (தி.மு.க.) தூண்டுதலில் ஊர் பஞ்சாயத்து கூடியது. விசாரணையே நடத்தாமல், 'வி.வி.மு.காரன் தப்பு செய்து விட்டான், மன்னிப்புக் கேள்' என தோழர் மணியை வலியுறுத்தினர். செல்வராஜின் திட்டப்படி வெங்கடேஷ் என்ற ரவுடி மணியைப் பிடிக்க பின்புறமிருந்து ஒருவன் அடித்துவிட்டான். பஞ்சாயத்தில் அடித்தது தவறு; பதில் சொல்லுங்கள் என்றபோது, காலையில் பேசலாம் என நழுவி விட்டனர்.

மறுநாள் 16-ஆம் தேதி மூன்று தோழர்களுக்கு தலா ரூ. 500 என ரூ. 1500 அபராதம் விதித்துத் தீர்ப்புக் கூறினர். அவர்கள் மிரட்டியதால் முதலில் ஒத்துக் கொண்ட தோழர் மணி, பிற தோழர்கள் சுட்டிக் காட்டிய பின் பஞ்சாயத்து தீர்ப்பை ஏற்க மறுத்தார்.

இதனால் திரும்ப பஞ்சாயத்து கூடி வி.வி.மு.வைத் தடைசெய்து, ஊர் கட்டுப்பாடு போட முயன்றனர். 50 பேர் கொண்ட ரவுடிக் கும்பல் குடிபோதையில் தோழர்களது வீட்டு முன் ரகளை செய்தது. தோழர்கள் இதை எதிர்த்து சட்டப்படி நடவடிக்கை மேற்கொண்டனர். காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது. முதலில் வழக்குப் பதிய மறுத்த போலீசு, நாம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப் போவதையறிந்து வழக்கைப் பதிவு செய்தது.

இடையில் தோழர் ஒருவரின் அம்மாவை பஞ்சாயத்தில் மிரட்டி ரூ. 500 கட்ட வைத்து விட்டனர். காவல் நிலையத்தில் இரு தரப்பினரையும் கூட்டி, சமரசம் பேச முயன்றது போலீசு. தவறு செய்யாததற்கு தண்டம் போட்டு, தடை போட்டதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற போது, ஆதிக்க வாதிகள் முதலில் மறுத்தனர். ஒரு ரூபாய் கூட தண்டம் கட்டமாட்டோம் என நமது வழக்கறிஞர் உறுதியாகக் கூறிவிட்டார்.

இதன்பின், அமைச்சர் நேருவின் தம்பி மூலம் மீண்டும் 21.1.'98-இல் வட்டாட்சியர் விசாரணைக்கு முயன்றனர். மறுபுறம் நமது அமைப்பை தடை செய்வதாக பஞ்சாயத்தில் நாம் இல்லாமல், விசாரணையும் செய்யாமல் ஆதிக்கத் திமிருடன் அறிவித்தனர். அதை எதிர்த்து 2 மணி நேரத்திற்குள் பிரசுரம் அச்சிட்டு வினியோகித்தனர் தோழர்கள்.

இதனால் சாதி கட்டுப்பாட்டிற்கு பயந்து ஊர்ப் பஞ்சாயத்தாரின் அடாவடிக்கு துணை போன பலர் ஒதுங்கிக் கொண்டனர். 21-ஆம் தேதி, கிராம பஞ்சாயத்தார் மன்னிப்பு கேட்க வேண்டும் இல்லை எனில் புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வட்டாட்சியரும் போலீசும் கூறினர். அதுவரை 4 பேருக்கு பஞ்சாயத்து பணிவதா என சாதி ஆதிக்கக் கண்ணோட்டத்தில் மிரட்டி வந்தவர்கள் மன்னிப்பு கேட்டு, பணத்தையும் கொடுத்தனர்.

இப்போது வி.வி.மு. ஆதிக்கவாதிகளை எதிர்க்கும் அமைப்பு என மக்களிடம் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

தகவல்: வி.வி.மு., பெருவளப்பூர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தூக்குக் கயிறை முத்தமிட்ட தோழர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவு நாளான 23.03.98 அன்று, "நாடு மீண்டும் காலனியாவதைத் தடுப்போம்" எனும் தலைப்பில், நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் தடைகளையெல்லாம் மீறி ம.க.இ.க. சார்பாக நடைபெற்ற முதல் பொதுக் கூட்டமாகும் இது. இப்பொதுக் கூட்டத்திற்கு தோழர். தவமுதல்வன் தலைமையேற்க, ம.க.இ.க. மாநில துணைச் செயலர் தோழர் காளியப்பன், நாட்டை மீண்டும் காலனியாக்க ஏகாதிபத்தியங்களோடு ஓட்டுக்கட்சிகள் கூட்டணி சேர்ந்து கொண்டு செய்து வரும் சதித்தனங்களைத் தோலுரித்து சிறப்புரையாற்றினார். மேலும், கோவை மாவட்ட ம.க.இ.க. செயலர் தோழர் மணிவண்ணன், கோவை பகுதித் தோழர் சூர்யாவும் உரையாற்றினர். பொதுக் கூட்டத்தின் இறுதியில் ம.க.இ.க. மையக் கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தகவல்: ம.க.இ.க., கோவை.

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## வரலாற்று உண்மைக்குத் திரை போட முயற்சி

இந்திரா காந்தி படுகொலைக்குப் பின், தில்லி சீக்கியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை கொலை வெறியாட்டத்தை விரிவாக விளக்கி, குருசரன் சிங் பாப்பர் என்பவர், ''அரசு நடத்திய படுகொலை'' எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இப்படுகொலையை நேரில் பார்த்த சாட்சிகள், பத்திரிகை செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல், இந்தி, ஆங்கிலம், குர்முகி மொழிகளில் வெளிவந்துள்ளது. எனினும் இந்நூலைத் தடை செய்ய வேண்டும் என்று தில்லி உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. வழக்கை நடத்துபவர்கள் காங்கிரசு கயவாளிகள் அல்ல. மத்தியில் ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணியும், தில்லி பா.ஜ.க. அரசும் தான் வழக்கையே தொடுத்தன.

## அதிகார வர்க்க விசாரணையின் மோசடி

குஜராத் மாநிலத்தில் சென்ற ஆண்டு சில விசாரணைக் கைதிகளின் கண்களில் ''டைகர் பாம்'' என்ற மருந்தைத் தடவி போலீசார் சித்தரவதை செய்த வழக்கை விசாரித்து வந்த அம்மாநில இரகசிய போலீசு, ''அப்படிபட்ட சம்பவமே நடைபெறவில்லை; எனவே, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போலீசாரை விடுதலை செய்ய வேண்டும்'' எனக் கூறியுள்ளது. இச்சித்திரவதைப் பற்றி புகார் கொடுத்த விசாரணைக் கைதி சங்கர் பிரசாத், ''போலீசார் தன்னை சித்திரவதை செய்யவில்லை; துணை கமிசனர் ராவ் தனது கண்களில் ''டைகர் பாம்'' மருந்தைத் தடவவில்லை'' எனத் தங்களிடம் தந்துள்ள வாக்குமூலமே, போலீசார் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளிக்க போதுமானது என வாதிடுகின்றனர் இரகசியப் போலீசார்.

## 'மார்க்சிஸ்டு'களின் சமூக நீதி

மனித மலத்தை மனிதன் அள்ளுவதைத் தடை செய்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் 'மார்க்சிஸ்டு'கள் ஆளும் மே.வங்க மாநிலத்தில் உள்ள மித்னாபூர் நகரில் இந்த இழி தொழிலைத் தடையை மீறியும் தொடர்ந்து நடத்தி வருகிறது மித்னாபூர் நகரசபை. தினந்தோறும் விடிவதற்கு முன்பாகவே எடுப்பு கழிப்பறைகளைச் சுத்தம் செய்யச் சொல்லி நகர சுத்தி தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்துவதன் மூலம், இது பரவலாக வெளியுலகுக்குத் தெரியாமல் மூடி மறைத்தும் வருகிறது அந்நகராட்சி. இந்த இழி தொழில் தொடர்வதை உடனே தடுத்து நிறுத்த உதவுமாறு மித்னாபூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான இந்திரஜித் குப்தாவிடம் கூறியதற்கு, ''நானொன்றும் நகரசபை உறுப்பினனல்ல'' எனத் திமிராகப் பதில் கூறியுள்ளார்.

முகாந்திரம் இருப்பதாகக் கூறி, மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

## இந்திய இராணுவத்திற்கு எதிராகத் திரண்ட மணிப்பூரி பெண்கள்

சனமாசா - மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த பத்தாவது வகுப்பு படிக்கும் இளம் மாணவி. இச்சிறுமியை பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதி இந்திய இராணுவம் கைது செய்தது. இதன் பின், இச்சிறுமி உயிரோடு இருக்கிறாளா? அல்லது இறந்து விட்டாளா? என்பதே அவரது பெற்றோர் உட்பட யாருக்கும் தெரியவில்லை. இந்திய இராணுவத்தின் இம்மனித உரிமை மீறலை எதிர்த்து, அம்மாநிலத்தைச் சேர்ந்த 65 பெண்கள் அமைப்புகள் ஒன்றாக இணைந்து, சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 அன்று, மிக பிரம்மாண்டமான பேரணியை, தலைநகர் இம்பாலில் நடத்தின. இப்பேரணியில் கலந்து கொண்ட 20,000-க்கும் மேற்பட்ட பெண்கள், ''சனமாசாவை விடுதலை செய்'', ''இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டத்தை ரத்து செய்'' என முழங்கி, பேரணியை அரசியல் ஆர்ப்பாட்டமாக நடத்திக் காட்டினர்.

## தி.மு.க. அரசின் வழிப்பறி கொள்ளை

பேருந்து கட்டணத்தை உயர்த்தி தனது கஜானாவை நிரப்பிக் கொண்ட தி.மு.க. அரசு, இப்போது அதுவும் போதாதென்று, வட்டார அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் ''ஆம்புலன்ஸை''ப் பயன்படுத்துவதற்கும் கட்டணம் விதித்துள்ளது. இனி நோயாளிகள் ஒரு கி.மீ. தூரத்துக்கு ரூ. 1.50 கட்டணமாகச் செலுத்த வேண்டும். இதன் மூலம் எரிபொருள் செலவை மிச்சப்படுத்தப் போகிறார்களாம்!

## ஜெயாவுடன் போட்டா போட்டி

தமிழகத்தில் தஞ்சமடையும் ஈழத் தமிழர்கள் அனைவரும் போலீசு நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார் பாசிச ஜெயா. கருணாநிதி அரசோ இன்னும் ஒருபடி மேலே போய், ''அகதிகளாக வரும் ஈழத் தமிழர்கள் அனைவரும் ஒளிப் பேழையில் பதிவு செய்யப்படுவர்; அவர்களது கைரேகைகளும் பதிவு செய்யப்படும்'' என உத்தரவிட்டுள்ளது. ஈழத் தமிழ் அகதிகளை கிரிமினல்களாகக் கேவலப்படுத்தும் கருணாநிதியின் இந்த உத்தரவைக் கேட்டு ஈழத் தமிழர்களை ஒடுக்குவதில் தம்மையும் கருணாநிதி மிஞ்சிவிட்டாரே என ஜெயா மட்டுமல்ல, சந்திரிகாவும் கூடப் பொறாமை கொள்ளலாம்!

## பன்னாட்டு நிறுவனத்தின் பாக்கெட்டில் கர்நாடகா ஓட்டுக் கட்சிகள்

''கோஜெண்ட்ரிக்ஸ்'' என்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனம், கர்நாடகா மாநிலத்தில் மங்களூர் நகருக்கு அருகே, அப்பகுதி மக்களின் எதிர்ப்பையும் மீறி, மின்நிலையமொன்றை அமைத்து வருகிறது. இப்பன்னாட்டு நிறுவனம், இம்மின்நிலையத்தை அமைப்பது தொடர்பாக, 19 கோடி ஹாங்காங் டாலர்களை பல்வேறு அரசியல்வாதிகளுக்கு இலஞ்சமாகக் கொடுத்துள்ளது என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இக்குற்றச்சாட்டு பற்றி விசாரித்த அம்மாநில உயர்நீதி மன்றம் இலஞ்சம் கொடுக்கப்பட்டிருப்பதற்கான

குஜராத் போலீசாரால் கண்களில் ''டைகர் பாம்'' மருந்து தடவப்பட்ட விசாரணைக் கைதிகள்: நீதி மறுக்கப்பட்டது.



## ''நாற்காலி''தான் நிரந்தரக் கொள்கை

மேற்கு வங்க மாநிலத்தில் ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் மீண்டும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழிப் பாடமாகக் கொண்டு வர முடிவெடுத்துள்ளது இடதுசாரி கூட்டணி அரசு. கூட்டணி அரசின் இம்முடிவுக்கு அம்மாநிலத்தில் கடும் எதிர்ப்பு நிலவி வருகின்ற போதிலும், இம்முடிவை எப்படியாவது நடைமுறைக்குக் கொண்டு வந்து விட ஜோதிபாசு காட்டும் தீவிரம் சொல்லி மாள முடியாது. நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் சரிந்து போன தனது செல்வாக்கைத் தூக்கி நிறுத்தவே, கல்விக் கொள்கையில் இப்படி குட்டிக் கரணம் அடித்துள்ளது 'மார்க்சிஸ்டு' கட்சி. ஓட்டு வேட்டைக்குப் பயன்படாத கொள்கையைத் தூக்கிக் கொண்டு அலைய 'இடதுசாரிகள்' மட்டும் இளிச்சவாயர்களா?


Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ

# இதுதான் இன்றைய இந்தியா




**போலீசு** பயிற்சிக் கல்லூரி சார்பில் சென்னையில் நடந்த மனித உரிமைக் கருத்தரங்கம்தான் இந்தப் படம். பயிற்சியின் போதே போலீசாருக்கு மனித உரிமைகள் குறித்த விவரங்கள் தெரிய வேண்டும் என்பதற்காகவே இக்கருத்தரங்கம் நடத்தப்பட்டதாம்! கருத்தரங்கில் போலீசாருக்குப் போதனை செய்த அனைவருமே, ''போலீசு, சட்டப்படி நடந்து கொள்ள வேண்டும்'' என்ற பழைய பல்லவியைப் பாடிச் சென்றனர். சட்டமே மனித உரிமைகளுக்கு எதிராக இருக்கும் பொழுது, அதை அமுல்படுத்தும் போலீசிடம் எப்படி குடிமக்களை மதிக்கும் மாண்பை எதிர்பார்க்க முடியும்?

இதோ தமிழகப் போலீசாரால் தீக்கிரையாக்கப்பட்ட இந்த வீடும், அடித்து நொறுக்கப்பட்டிருக்கும் பொருட்களும் கொடைக்கானலுக்கு அருகேயுள்ள குண்டுபட்டி கிராம மக்களுக்குச் சொந்தமானவை. ஜெயாவிற்கு கொடியங்குளம் என்றால், கருணாநிதிக்கு குண்டுபட்டி எனக் குறிப்பிடுமளவிற்கு, 150-க்கும் மேற்பட்ட ஆயுதப் போலீசார் உள்ளூர் ரவுடிகளையும் சேர்த்துக் கொண்டு அச்சின்னஞ்சிறு மலை கிராமத்தைச் சூறையாடியுள்ளனர். அக்கிராம மக்கள் அப்படியென்ன கிரிமினல் குற்றம் செய்துவிட்டார்கள்?





தங்கள் கிராமத்திற்கு சாலை, குடிநீர், பள்ளிக்கூடம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படாததால், அம்மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க முடிவு செய்தார்கள். ஓட்டுப் போடச் சொல்லி வற்புறுத்திய தி.மு.க. ஒன்றியச் செயலாளரையும், மிரட்டிப் பணிய வைக்க முயன்ற போலீசையும் துரத்தியடித்தனர். இதற்குப் பழி தீர்த்துக் கொள்ள, தேர்தல் முடிந்த பின்பு போலீசு திட்டமிட்டு நடத்திய தாக்குதல் தான் இது.

தாக்குதலின் பொழுது போலீசாரால் தூக்கியெறியப்பட்ட பச்சிளங் குழந்தை அடுத்த சில நாட்களிலேயே இரத்த வாந்தியெடுத்து இறந்து போனது. ''போலீசாரைச் சிறைப் பிடித்ததாக'' வழக்குப் போட்டுக் கைது செய்யப்பட்ட குண்டுபட்டி கிராம மக்கள் சிறையிலும் தாக்கப்பட்டனர். இதனால்தான் முருகேசன் என்பவர், பிணையில் வெளிவந்த சில நாட்களிலேயே இறந்து போனார் என அவர்கள் சந்தேகங் கொண்டு, நீதி கேட்டுப் போராடுகின்றனர். அம்பலப்பட்டுப் போன போலீசோ, குண்டுபட்டி கிராம மக்கள் கஞ்சா கடத்தல் பேர்வழிகள் எனப் போலி ஆவணங்களைத் தயாரித்து வழக்கை திசை திருப்ப முயலுகிறது.

போலீசைத் திருத்தி விடப் போவதாக மார்தட்டிக் கொண்டு ஆட்சியாளர்களால் ஆங்காங்கே நடத்தப்பெறும் கருத்தரங்குகள் ஒருபுறம், நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும்... என்பதற்கேற்ப, உழைக்கும் மக்களைக் கடித்துக் குதறும் போலீசின் அத்துமீறல்கள் மறுபுறம். இதற்கு நாம் முற்றுப் புள்ளி வைக்கப் போவது எப்போது?